மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

ர் 2 | 15 - 10 - 53 | இதழ் 1

பெற்ற தாயின் பெருமகிழ்ச்சி!



[புறநானூற்றில் ஒரு காட்சி.] [ஓவியர்: பாலு பிரதர்ஸ்.

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா

எம் உளத்தே வாழ்வீர்!

(பு. ஆ. முத்துச்செல்வன்)

1. பொழில் மேவும் புள்ளினம் போல் இளைஞர் கூட்டம்
போந்து நினதடி பரவிப் போற்றும் வண்ணம்
எழில் மேவும் தமிழகத்தில் வெப்பம் நீங்க
இளந் தென்றல் நடைகாட்டி இருந்த ஐயா!
தொழிலாளர் குலதெய்வமென வணங்கும்
தூயவனே! திரு. வி. க. என்னும் மேலோய்!
அழியாத இலக்கியங்கள் பலவும் தந்த
அருள் வடிவே மறைந்தனையோ அந்தோ! அந்தோ!.

2. கலியாண சுந்தரனார் என்னும் அண்ணல்!
காவிரிபோல் வளங்குன்றா கருத்து மிக்கீர்!
சலியாத முயற்சியெனும் தவமே தாங்கி
தமிழ் நிலத்தில் சமதருமம் தழைக்கச் செய்தீர்
நலிவான காலத்தும் பணிபுரிந்து
நாட்டுமக்கள் நலமொன்றே எண்ணி வாழ்ந்த
வலிவான கொள்கையெலாம் மறந்தேவிட்டு
வண்டமிழே. நீர் மறைதல் நியாயம் தானோ?

3. அறந்தந்த திருக்குறளின் ஆட்சி காண
அறிவியலும் அரசியலும் ஆக்கித்தந்தாய்
புறம்திருந்த அகம்திருந்த புலமை சான்ற
புத்தமுதாம் வித்தகனே! புகழ்பேரன்பே!
பிறந்த நின்றன் திருநாளைத் தமிழர் நாட்டில்
பெருமிதமாய்க் கொண்டாடி இருக்கும் வேளை
சிறந்தமைந்த நின்வாழ்வு முடிந்த தென்னும்
செய்தியினைக் கேட்டு மனம் திடுக்கிட்டோமே.

4. மண்பெருமை பெற்றதுநின் தோற்றத்தாலே
வளர் தமிழும் சிறந்தது நின் வளர்ச்சியாலே
கண் பெருமை பெற்றதுநின் நூல்கள் கண்டே
கற்றறிந்தோர் சிறந்தனர் நின் கருத்துக்கொண்டே
பெண் பெருமை பெற்றனள் நின் பொன்னெழுத்தால்
பிறர்க்குரியராய் வாழ்ந்த பெருமான் நீயே
எண்பெருமை இவையனைத்தும் எண்ணி எண்ணி
ஏங்கிடவோ எமைவிடுத்தாய் எந்தாய் எந்தாய்!

5. திரு. வி. க. என விளங்கும் திருப்பேர்கொண்ட
செந்தமிழர் குலவிளக்கே! தியாக வீர!
வருவீரா? எனஎவரும் வருகை ஏற்று
வாய் பார்த்து சொற்கேட்டு மகிழவாழ்ந்தீர்
குருவே! நற்குணக்குன்றே! கோதில்லாத
குடியரசுபெற உழைத்த குளிர்பூங் காற்றே!
ஒரு வீதமும் பயனை வேண்டா உண்மை
ஓவியமே! ஒளியே! எம்உளத்தே வாழ்வீர்!

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

15-10-53 வியாழக்கிழமை

விளையாட்டு மைதானத்தில் நேரு பண்டிதர்

ஆந்திர மாகாண ஆரம்ப விழாவுக்கு வந்த பண்டித நேரு, மேலும் தொடர்ந்து தென்னாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்துள்ளார். சென்னையிலும், மதுரையிலும், கோவையிலும் அவர் பேசியிருக்கிறார், உலக அரசியலிலிருந்து உள்நாட்டில் இருக்கும் "சிறு" கட்சிகள்வரை.

காங்கிரஸ் கட்சியின் பிரதம சொற்பொழிவாளர் என்ற முறையில்—ஒரு நாடாளும் பிரதம மந்திரியோ, பெரும் அரசியல் பொறுப் பேற்றவரோ பேசமுடியாத சொற்களில் நேரு பண்டிதர், தமது ஆத்திரத்தையும், விருப்பங்களையும் வெளியிட்டிருக்கிறார். கோபத்திலும், ஆத்திரத்திலும் உணர்ச்சிவயப்பட்டு, அமைதியிழந்து, தோன்றியதைப் பேசிவிடுவதில் நேரு பேர்பெற்றவர். சொல் அழகாக இருந்தால், பிடித்தமானதாக இருந்தால், உடனே அதை உபயோகிக்க அவர் தயங்குவதில்லை, அது நிலைக்கு ஒத்ததாகயிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல்.

சென்னைக்கு அவர் வந்தபொழுது, 2-ந் தேதி காலையில் காங்கிரஸ்—போலீஸ் இவர்களின் கடுமையையும், காவலையும் தாண்டி, கருப்புக் கொடிகள் காட்டப்பட்டன. அன்று மாலை நடந்த கூட்டத்தில், நேரு பண்டிதர் பல வாசகங்களை அள்ளி வீசியிருக்கிறார். அவற்றில் மிக முக்கியமானவை :

"இனி மொழிவாரி மாகாணங்கள் கேட்பது கூடாது; கொடுக்கப்போவதுமில்லை."

"இந்தியாவை விட்டு எந்தப் பகுதியும் வெளியே போகவிடமாட்டோம்."

"திராவிடரியக்கங்கள் செய்தவை காட்டுமிராண்டித்தனமானவை."

விளையாட்டு மைதானத்தில் நின்று இந்த கடும் சொற்களை வீசிவிட்டுப் போய்விட்டார் பண்டித நேரு.

அவர் இந்தியாவின் பிரதமர், காங்கிரஸ் தலைவர், காஷ்மீரப் பண்டிதர், ஆசியாவின் ஜோதி, அலகாபாத்வாசி.

தாம் வெளியிட்ட இந்த தீர்ந்த முடிவுகளுக்கு நேரு காரணங்கள் தரவில்லை. வலியுறுத்துவதற்குத் திரும்பத் திரும்ப அவற்றை வற்புறுத்தினாரேயன்றி, தான் கொண்ட கருத்துக்களை விளக்கிக் காட்டவில்லை, காரணங்களைக் கூறவில்லை.

அவர் சொல்லிய "வேதவாக்குகளை", பத்திரிக்கையில் கொட்டை எழுத்துக்களில் வந்த உபதேசங்களை—உத்திரவுகளைப் படித்துப்பார்த்தால் சில முன்னுக்குப்பின் முரணாக, சில சுதந்தரத்துக்குப் போராடிய பண்டித நேருவுக்கும், அதிகாரத்தில் வீற்றிருக்கும் பண்டித நேருவுக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்குவதாக இருக்கின்றன.

மொழிவழி மாகாணங்கள்

"முதலாவது மொழிவழி மாகாணங்கள் கூடாது, இனி எதையும் கவனிக்கப்போவதில்லை" என்று காங்கிரஸ் தலைவர் இன்று முழக்கமிடுகிறார். "மொழிவழி மாகாணங்கள் அமையவேண்டும்" என்று கிளர்ச்சிகளை ஆரம்பித்ததே காங்கிரஸ்தான். காங்கிரஸ், கட்சியின் அடிப்படைக்கொள்கையைப்பற்றிய தீர்மானங்கள்—கராச்சி தீர்மானங்கள் என்று கூறப்பட்ட 18 தீர்மானங்களில் "மொழிவழி மாகாணங்கள் அமைக்கப்படவேண்டும்" என்று ஒரு தீர்மானம் இருக்கிறது. காங்கிரஸ் கட்சி அமைப்பிலும், மாகாண காங்கிரஸ்கள் அமைக்கப்பட்டபொழுதும், மொழிவழிதான் பிரிக்கப்பட்டன. இன்றும் அப்படித்தான் இயங்கி வருகின்றன. ஆனால் அதே காங்கிரஸ், மொழிவழி மாகாணங்கள் அரசியல் அமைப்பில் கொண்டுவர மறுக்கின்றது. காரணமென்ன? பெற்ற தாயே, தன் குழந்தைகளில் ஒன்றை

உதறித் தள்ளுவது—உதறித்தள்ளுவது மட்டுமல்ல, கழுத்தை நெரித்துக் கொல்லவும் முற்படுவதேன்? தாய்க்கு "காட்டுக்குணம்" வந்துவிட்டதா? அல்லது பசிக்கிறது என அழும் குழந்தைக்கு கஞ்சி கொடுக்க வகையில்லாத நிலையா?

மொழிவழி மாகாணங்களைக் கேட்காதீர்கள் என நேரு பண்டிதர் மட்டுமல்ல, தாண்டன் பிரபுவும் உபதேசம் புரியக் கிளம்பிவிட்டார். காரணமென்ன?

மொழிவழி மாகாணங்கள் அமைந்துவிட்டால், மற்ற மொழிகள் ஆக்கம்பெற்று, இந்தி மொழியின் ஆதிக்கம் குறைந்துவிடுமென அவர்கள் கருதுகின்றனர். இந்தியின் படைபெடுப்பை வெற்றிகரமாக்க, இந்திய ஏகாதிபத்தியத்தை வளர்க்க, இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் இந்திமயமாக்கத் தீட்டப்பட்டுள்ள திட்டத்துக்கு எதிராக மற்ற மொழிகளின் வளர்ச்சியும், மொழிவழி மாகாணங்களின் அமைப்பும் இருப்பதால்தான் டில்லி அதிபரும், இந்தி காவலரும் மொழி மாகாணங்கள் அமைவது கூடாதென குமுறுகின்றனர், கனல் கக்குகின்றனர், எரிதவழப் பேசுகின்றனர். சிதறிக்கிடக்கும் நிலங்கள், சிதைந்து கிடக்கும் மொழிகள், தனித்தனியாக சேர்க்கப்பட்டால், இந்தி ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பு உண்டாகுமென்ற எண்ணமே அவர்களை—வடநாட்டுத் தலைவர்களை, இந்தி காவலர்களை பயமுறுத்துகிறது. வடநாட்டுக்காரர்களிடம் காங்கிரசின் தலைமைப்பீடம் இருப்பதால், காங்கிரசின் முன்னைய தீர்மானங்கள் இன்று மறுக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் வருகின்றன. மொழிவழி மாகாணங்களால், மற்ற நாட்டு மொழிகளுக்கும் ஏற்றங் கிடைக்கும் என்பதைத் தவிர, வேறு காரணங்கள் எதுவும் காண்பிக்க முடியாது.

"அனுமதிக்கமாட்டோம்"

"இந்தியாவை விட்டு எந்த மாகாணமும் வெளியேபோக அனுமதிக்கமாட்டோம்" என நேரு பண்டிதர் கண்டிப்பாகத் தெரிவித்திருக்கிறார். "போகக்கூடாது" "போகவேண்டாம்" என்று அவருடைய கருத்தை வெளியிடுவதாக வாசகங்கள் இல்லை.

"அனுமதிக்கமாட்டோம்" என அதிகாரக் குரலில் கூறியிருக்கிறார். அதன் முழு அர்த்தமென்ன?

யாரும் போகமுயன்றால் அடக்கப்பட்டுவிடுவார்கள், ஆயுதபலத்தால், படைவரிசைகளால், அடக்குமுறையால். பலாத்கார முறையில் அடக்கப்படும் என்று நேரு பண்டிதர் அறிவிக்கிறார். அத்தகைய ஆபத்தான நிலை—மாகாணங்களில் சிலவற்றுக்கு அத்தகைய ஆவல் உண்டாகிவருவதை நேரு உணர்ந்திருக்கிறார். எனவே துப்பாக்கியைக் காட்டி மிரட்டுகிறார், "அனுமதிக்கமாட்டோம்" என எச்சரிக்கிறார். இந்தியாவின் ஒற்றுமை காப்பாற்றப்பட வேண்டுமென்று, திரும்பத்திரும்பக் கூறியிருக்கிறார். இந்தியா ஒற்றுமையாக இருக்கிறதா? இருக்குமா? இவைகளில் அதன் பிரதமருக்கே சந்தேகங்கள் இருக்கின்றன.

இந்திய துணைக்கண்டத்தில், பல்வேறு மொழிகள், மாறுபட்ட கலாசாரங்கள், வேறுபட்ட இனங்கள் வாழ்கின்றன. "அடிமைநாடுகளின் சிறைக்கூடமாக" ஜாரரசின் ஏகாதிபத்தியம் விளங்கியதைப்போல, டில்லி ஆதிபத்தியத்தின் கீழ் இந்தியாவில் இந்தி தவிர்த்த மற்ற மொழிகளும், கலாசாரங்களும், இனங்களும் அடைக்கப்பட்டு இருக்கின்றன. அத்தகைய சிறைக்கூடத்தின் பிரதம காவலர் என்ற முறையில், அடைபட்டுக் கிடக்கும் எந்த அடிமையும் வெளியேறமுடியாதென்று நேரு பண்டிதர் எச்சரிக்கின்றார்.

ஜாரரசரா? அல்லது சர்வாதிகாரியா?

ஒவ்வொரு ஏகாதிபத்தியத்தையும் கட்டிக்காத்தவர்கள் அப்படித்தான் எச்சரிக்கைகளைத் தந்தார்கள். அடக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளைப் பார்த்து நெப்போலியன் அப்படித்தான் ஆர்பரித்தான். அடிமைநாடுகள் பிரிந்துபோகட்டும் என ஜாரரசன் பார்த்துக்கொண்டிருந்தாரா? பரந்த சாம்ராஜ்யங்களை உண்டாக்கிய சீசர், "இன்னும் உலகம் இருக்கிறதா?" என்று கிரேக்க நாட்டிலிருந்து கிளம்பி, ஜீலம் நதிக்கரைவரை படைவலி காட்டிய அலெக்சாந்தர் அவர்களெல்லாம் அடிமைநாடுகளையெல்லாம் ஒன்றுசேர்த்து, ஒரே சாம்ராஜ்யமாக ஆளத்தான் நினைத்தனர்.

ஆனால் மாவீரர்கள் மறைந்தனர், சாம்ராஜயங்கள் சரிந்தன.

இது வரலாறு தரும் பாடம்.

இந்தியாவில் மொழிவழி மாகாணமும், இன வழி உரிமைகளும் கிடைத்துவிட்டால், பிளவு பட்டுப்போகும் என நேரு பயப்படுகின்றார். இல்லை, இந்தியா பிளவுபட்டுதான் இருக்கிறது. பல பிளவுபட்டு நிற்கும் இந்தியா, வலிமைமிக்க மத்திய சர்க்கார் அமைப்பாலும், படைபலத்தாலும், விசேஷ அதிகாரங்களாலும் ஒன்றாகப் பாதுகாக்கப்பட்டுவருகிறது. பிளவுகள் பிணைக்கப்பட்டிருக்கின்றன, இரும்புச் சங்கிலிகளால் சேர்க்கப்படவில்லை.

இரும்புச் சங்கிலியில் சிறிது பலவீனம் தோன்றினாலும், அவை பிரிந்துவிடும். இந்த வெவ்வேறு பகுதிகள் பிரிந்துவிடுவதால், இந்தியாவிலிருந்து வெளியே போவதாக ஆகாது. வங்கம், கலிங்கம், திராவிடம், மராட்டா, இப்படி பல பகுதிகள் உரிமைபெற்றால் இந்தியா என்ற பெயர் விலகிவிடும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆயுதபலத்தால், வரலாற்றில் முதல் முறையாக, இநதிய துணைக் கண்டத்தில் ஒரு சாம்ராஜ்யத்தைக் காத்து வந்தது. அதே வகையில், டில்லி ஏகாதிபத்தியமும் முயலுகிறது.

"எவரையும்போக அனுமதிக்கமாட்டோம்" என நேரு ஆயுதபலத்தையும், அதிகாரத்தையும் காட்டி மிரட்டும்பொழுது, ஒரு ஜாரரசன், அல்லது ஒரு சர்வாதிகாரி எக்காளமிடுவதைப் போலிருக்கிறதேயன்றி, ஒரு ஜனநாயகவாதியின் பேச்சாகத் தோன்றவில்லை. "கூடாது, வேண்டாம்" என்று ஆலோசனை கூறலாமேயன்றி, "அனுமதிக்கமாட்டோம்" என்ற அதிகாரக்குரலுக்கு ஜனநாயகத்தில் இடமில்லை.

அதிகாரக் குரலில், ஆத்திரம் கலந்திருக்கிறது காரணங்கள் தரமுடியாத நிலையில் ஆத்திரம் அதிகப்படுவது இயல்பு.

காட்டுமிராண்டித்தனமா?

முன்பு தமிழர்களின் உரிமைப்போராட்டங்களை "நான்சென்ஸ்" என்ற நேருபண்டிதர், இப்பொழுது "திராவிடரியக்கங்கள் காட்டுமிராண்டித்தனமானவை" என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார். அவர் அடைந்த ஆத்திரத்துக்கும் அதிருப்திக்கும் காரணங்கள் நமக்குத் தெரிகிறதேயன்றி, எந்த வகையில், எந்தக் காரணங்களால், அந்த அருமையான "காட்டுமிராண்டித்தனத்தை" நேரு கண்டுபிடித்தார் என்று தெரியவில்லை.

நேருவின் நான்சென்சுக்கு எதிராக, தமிழ் நாடெங்கும் ஜூலை 15-ல் திராவிட முன்னேற்றக்கழகம் நடத்திய ரயில் நிறுத்தக் கிளர்ச்சிகளைப் பற்றிதான் அவர் கூறியிருக்கிறார். ரயில் நிறுத்தம் காட்டுமிராண்டித்தனமானது என்று வைத்துக்கொண்டால், 1942-ல் காங்கிரஸ் கட்சியினர் செய்தவைகளுக்கு என்ன பெயர் தருவது? ரயில்கள் நிறுத்தப்பட்டது மட்டுமல்ல, தண்டவாளத்தை விட்டுச் சாய்க்கப்பட்டன, வண்டிகள் எரிக்கப்பட்டன, பொருள்கள் சூறையாடப்பட்டன, கட்டிடங்கள் இடிக்கப்பட்டன; திராவகமும், தீப்பந்தமும் நாலாபக்கத்திலும் வீசப்பட்டன. தி. மு. கவில் ரயில் நிறுத்தம் காட்டுமிராண்டித்தனமானது என்றால், நிச்சயம் அதைவிடப் பத்து மடங்கு அதிகமான காட்டுமிராண்டித்தனமான செயல்கள்தாம் அவை.

கடைசியாகச் சிறையிலிருந்து வெளிவந்தது பண்டித நேரு, அந்தச் சம்பவங்களைக் காட்டுமிராண்டித்தனமானவை என்று சொல்லவில்லை. மற்றவர்கள் தயங்கிநின்ற நேரத்தில், நேருதான் முன்வந்து "இந்த போராட்டத்தின் முழுப்பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்று கூறினார். அதே நேரு—ஆனால் அன்று அவர் பதவியிலில்லை—அவர் எத்தகைய சேதமும், அமைதிப்பங்கமும் உண்டாக்காமல் நடத்தப்பட்ட கிளர்ச்சியைப் பற்றிக் காட்டுமிராண்டித்தனமானது என்று கூறுகிறார்.

தி. மு. க. நடத்திய கிளர்ச்சி காட்டுமிராண்டித்தனமானது என்றால், நேருவும் அவரது சகாக்களும் நடத்திய "திருவிளையாடல்கள்" காட்டுமிராண்டித்தனத்துக்கும் முற்பட்ட கற்காலம், குகைக்காலம் இவைகளில் செய்ய வேண்டிய செய்கைகளாகும்.

நாம் நடத்திய கிளர்ச்சிகளை நேரு வந்ததும் போற்றிப் புகழ்வார் என்று எதிர்பார்க்கவில்லை. கண்டிப்பார் என்பது எதிர்பார்த்ததே. ஆனால் காரணங்கள் ஏதாவது காட்டுவார் என எதிர்பார்த்தோம். ஆனால் அவரோ, காங்கிரஸ் தலைவர், காஷ்மீரப் பண்டிதர், இநதியாவின்

பிரதமர், ஆசியாவின் ஜோதி. எனவே கண்டதைச் சொல்லி விட்டுப் போய்விட்டார், காரணங்கள் கூறாமல்.

நாடு காடாகிவிட்டது

நாம் காட்டுக் குணம்படைத்தவர்களோ என்னவோ, நாம் இருக்கிற நாடு காடாகிவிட்டது, நடக்கிற ஆட்சிமுறை காட்டாட்சியாக மாறிவிட்டது. இது நன்றாகத் தெரிகிறது.

வயலும் சோலையும் சூழ்ந்த நாடு, வளமும் வாழ்வும் கொழித்த நாடு, மாடமும் கூடமும் செறிந்த நாடு, மாசறு முத்தும் மணியும் பொன்னும், ஆரமும் அகிலும் அணியும் பணியும் சிறந்த நாடு, முல்லையும் குறிஞ்சியும் முகிழ்த்த நாடு, காதலும் கவிதையும் தவழ்ந்த நாடு, அறிவும், ஆற்றலும், வீரமும், தீரமும் திகழ்ந்த நாடு. அது இயற்கையன்னையின் எழிற் பீடமாக, இன்ப வாழ்வின் உறைவிடமாக இருந்தது. பின் சூதமதியினரின் வரவால், சுரண்டல் கூட்டத்தினரின் கொடுமையால் நாடு காடாகிவிட்டது. முல்லைக் கொல்லைகள் முள் நிறைந்த பாழ்வெளியாகிவிட்டன. அங்கே வெறிகொண்ட ஓநாய்கள் உலவுகின்றன. சதிசெய்யும் நரிக்கூட்டம் சூழ்ந்து வருகிறது. கிள்ளையின் குரலை அடக்கிவிட்டு கழுதை கானம் பயிலுகிறது. வான்மதியை நோக்கி செந்நாய் ஊளையிடுகிறது. சிரங்கு கொண்ட குரங்கோ மரத்துக்கு மரம் தாவுகிறது. ருத்ராட்சப் பூனைகள் மறைந்து வருகின்றன, ஏமாற்ற. மண்ணிலே பெருச்சாளிகள் வளை தோண்டுகின்றன, வேரை அறுத்துக்கொண்டு. இந்தக் காட்டில், புதர்களில் மறைந்து கொண்டிருந்துவிட்டு, அந்திமயங்கும் நேரத்தில், திடீரெனக் குதித்தோடிவரும் கருப்பு முகமூடிக்காரன், வருவோரைத் தடிகொண்டு தாக்குகிறான். நாடு காடாக மட்டுமல்ல, சுடுகாடாகவும் ஆகிவிடுகிறது.

வடநாட்டில் காட்டுப்புறங்கள், நாட்டு நிலைமை அடையும்பொழுது, தென்னாட்டில் நாட்டுப்புறங்கள் காட்டு நிலை அடைகின்றன. வயல்கள் வெடித்துக்கிடக்கின்றன. குடும்பங்கள் நொடித்துப்போகின்றன.

வடநாட்டில் பாலைவனங்கள் சோலைவனமாகிறது, தென்னாட்டில் சோலைவனங்கள் பாலைவனமாகின்றன. மக்களின் வாழ்வு வரண்டதாகிறது.

புனலிடை மூழ்கிப், பொழிலிடை உலவிப், பொன்னார் இழையும் மணியும் பூண்டு கனிமொழி பேசிய காதலர் வாழ்ந்த நாட்டில், மக்கள் இன்று காட்டுமிராண்டிகளாகக் காட்சியளிக்கின்றனர். பரட்டைத் தலையும், பரதவிக்கும் கண்களும், எலும்பு எழுந்த மார்பும், தடுமாறும் கால்களும்—இல்லை காட்டு மிருகங்களுக்கும் அவர்களைவிடச் சிறந்த வசதிகள் கிடைக்கின்றன. காட்டு மிருகங்கள் பசியால் சாவதில்லை. ஆனால் இங்கே பசியால் சாகும் மனிதர்கள் இருக்கின்றனர். பசியாலும், வறுமையாலும் வேட்டையாடப்பட்டு, மலேயாக் காட்டுக்கும், இலங்கைத் தோட்டத்துக்கும் விரட்டியடிக்கப்படும் "மனித" மிருகங்கள் இங்கு ஏராளம்.

இந்த "நல்லவர்கள்" ஆட்சியில் நாடு காடாக ஆகிவிட்டது.

அவரும் நாமும்

திராவிடரியக்கங்களைப் பற்றிச் சரியாகத் தெரியாத நிலையில், ஆச்சாரியாரும் அவருடைய அன்பர்களும் தரும் ஓரிரு செய்திகள் தவிர, தென்னாட்டின் நிலைகளைப்பற்றி அதிகம் புரியாத நிலையில்—ஒருசமயம் தெரிந்தும் காட்டிக்கொள்ளாமலிருந்தாரோ, என்னவோ—நேரு பண்டிதர் அரசியல் கண்ணியத்துக்கு அப்பாற்பட்ட பல வார்த்தைகளால், நம்மைப்பற்றி, சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அவர் ஆட்சிபீடத்தில் இருக்கிறார், நாம் ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு ஆளாகியிருக்கிறோம்.

அவர் டில்லி அதிபர்—சென்னை வீதியில் பவனி வருகிறார், குதிரைப்படை சூழ, துப்பாக்கிகள் பாதுகாப்புத்தர; நமது தோழர்கள் சிறையிலே அடைபட்டுக் கிடக்கின்றனர், கருங்கற்சுவர்கள் சூழ, இரும்புக் கம்பிகள் காவல்புரிய.

விளையாட்டு மைதானத்தில் நின்று பேசிவிட்டார். அவர் ஆனந்தபவனத்தில் வாழ்பவர், ஆசியாவின் ஜோதியாக விளங்குபவர். நாமோ வேதனைமிகுந்து இருக்கிறோம், துன்பபுரியில் உழல்கிறோம், இருட்டறையில் தள்ளப்பட்டிருக்கிறோம்.

அவருடைய பேச்சுக்கு நல்ல விளம்பரம்தர,

பத்திரிக்கைகள் பல இருக்கின்றன, இந்திய ரேடியோ நிலையங்கள் இருக்கின்றன, படமாகப் பிடித்துக்காட்ட இந்திய சர்க்காரின் செய்திப் படம் இருக்கிறது. அவர் பக்கத்தில் பத்திரிக்கைபலம், பணபலம், பிர்லா டாட்டாக்கள், கள்ளமார்க்கட்காரர்கள்—இல்லை காங்கிரசின் மதிப்புக்குரிய கனதனவான்கள், இருக்கிறார்கள். நமக்கு அத்தகைய பக்கபலங்கள்—பக்தகோடிகள் கிடையாது. நமக்கு நாமேதான் துணையாக இருக்கிறோம்.

அடிமையைப்பார்த்து "நாயே, பேயே!" என்று அழைக்காத ஆண்டை கிடையாது. அதைப்போல அடிமை நாட்டினரை "காட்டுமிராண்டிகள், கருத்துக்கெட்டவர்கள்" என வடநாட்டு ஏகாதிபத்திய காவலர் கூறிச்சென்றுள்ளார்.

ஆனால்....

ஆனால் நேருவின் ஏளனச் சொற்களுடன் வரலாற்றின் கடைசி அத்தியாயம் முடிந்துவிடவில்லை.

"இந்தியாவா? அது எப்படி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து பிரிந்துபோக முடியும்" என்றுதான் இந்தியா பிரியும்வரை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் பேசிக்கொண்டிருந்தனர். இதையே பண்டித நேருகூட தன் சென்னைச் சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறார். "ஐரோப்பாவிலிருப்பவர்கள், ஆசிய நாடுகள் விடுதலைபெறக்கூடும் என்பதை நினைத்துக்கூட இருக்கமாட்டார்கள். இந்தியா விடுதலையடைந்து இருக்கலாம் என்பதை எண்ணிப்பார்ப்பதற்குக்கூட என்னால் முடியவில்லையென்று லார்ட் மார்லி—இங்கிலாந்து அரசியலில் மிகவும் முற்போக்கு வாதியெனக் கருதப்பட்டவர் 40 ஆண்டுகளுக்குமுன் சொன்னார். ஆனால் காலப்போக்கில் ஆசியா நாடுகள் விடுதலையை அடையத்தான் செய்தன."

பண்டித நேரு சொல்லிய அதே கருத்தை அவருக்கும், அவருடைய பக்கத்தினருக்கும் திருப்பிச் சொல்ல நாம் விரும்புகிறோம். அன்று பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் இந்தியா விடுதலையைப்பற்றி நினைத்ததுபோலத்தான் — ஏன் இதே நேருவும் அவருடைய சகாக்களும் பாகிஸ்தான் பிரிந்துபோகும்வரை அந்த அமைப்பு முடியாதது என்று கூறியதைப்போல —வடநாட்டு அரசியல்வாதிகள் திராவிடநாட்டுப் பிரிவினையைப்பற்றிப் பேசுகிறார்கள், நினைப்பதற்குக்கூட முடியாதது என்று கருதுகிறார்கள். ஆனால், அது அமைந்துவிட்ட பிறகு, இந்தப் பேச்சுகள் அர்த்தமற்றனவாகிவிடும்.

ஆதிபத்திய நாடு விரும்பி, அடிமைநாட்டுக்கு விடுதலை தருவதில்லை. போராட்டத்தினால்தான் அடிமை நாடு விடுதலை பெறுகிறது.

விடுதலை மற்றொரு நாட்டால் தரப்படுவதில்லை, சொந்த நாட்டால் எடுத்துக்கொள்ளப்படுவதாகும்.

உங்கள் பங்கை செலுத்திவிட்டீர்களா?

தமிழ் மக்களின் உரிமையை நிலைநாட்டப் போராடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பழிவாங்கும் திட்டத்தில் ஆச்சாரியார் அரசாங்கம் தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும் சதிவழக்குகள் தொடர்ந்திருக்கிறது.

கழகத் தலைவர்கள் சிறையில்! இந்த நிலையில்

சதிவழக்குகளை எதிர்த்து நிற்க, கழகத் தோழர்களை விடுவிக்க உடனே உதவுங்கள்!

ஆச்சாரியாரின் பழிவாங்கும் திட்டத்துக்குப் பதில் தாருங்கள்!

தூத்துக்குடி வழக்கு நிதிக்கு
கல்லக்குடி வழக்கு நிதிக்கு

உ த வு ங் க ள்!

எதிரிகளும் நண்பர்களும்

கனம் ஆச்சாரியார் புறப்பட்டுவிட்டார், பஞ்சகச்சத்தை வரிந்து கட்டிக்கொண்டு, பஞ்சாங்கத்தைப்பார்த்து நல்லநாள் குறித்துக் கொண்டு, தர்ப்பையை மந்திரித்துவிட்டு, தபோவலிமையைத் திரட்டி "பிடி சாபம்" என்று கூவிக்கொண்டு.

ஆச்சாரியார் புறப்பட்டுவிட்டார் "எங்கே அந்த முதல்தர எதிரிகள்?" என்ற ஓங்காரக் கூச்சலுடன், ஆங்கார ரூபத்துடன்.

குல்லுகபட்டர் கிளம்பிவிட்டார் கோபத்துடன், கீதையன்பர் கிளம்பிவிட்டார் யுத்த கோலத்துடன்.

மாம்பலத்து மாக்கியாவெல்லி புறப்பட்டுவிட்டார், "இந்த மண்டலத்தில் யார் நமது எதிரிகள்" என்று தேடிக்கொண்டு; மதியூக சாணக்கியர் கிளம்பிவிட்டார், கமண்டல நீரைத் தெளித்துக்கொண்டு.

பஜகோவிந்தம் பாடிக்கொண்டிருந்தவர், யுத்தகோஷத்துடன் கிளம்புகிறார். பக்தி மார்க்கத்தைத் தேடிக்கொண்டிருப்பவர், போர்க்களம் நோக்கிச் செல்லும் பாதையைத் தேடிச் செல்லுகிறார்.

"துஷ்ட நிக்கிரகம் செய்து, சிஷ்டபரிபாலனம் செய்ய வந்துவிட்டேன் இதோ!" என்று குதிக்கிறார் இந்தக் கரிகால அவதாரபுருஷர்.

எதிரிகளை நோக்கிச் சிரித்துப் பார்த்தார்; ஆனால் அவர்கள் எரிந்து சாம்பலாகப்போகவில்லை. நெற்றிக்கண்ணிருந்தாலாவது, விழித்தபோதே அவர்களை வேகவைத்திருக்கலாம்! கருப்புக் கண்ணாடி கிடைத்ததே தவிர, நெற்றிக்கண் எங்கும் கிடைப்பதாயில்லை. எனவே தம் அன்பர்களை நோக்கி "அந்த எதிரிகளைச் சமாளிப்பது உங்கள் கடமை" என்று ஆச்சாரியார் உபதேசித்துவிட்டார்.

சென்னையில் அக்டோபர் 3-ந் தேதி கூடிய காங்கிரஸ் ஊழியர்கள் மாநாட்டில் "இனி திராவிட, திராவிட முன்னேற்றக் கழகங்கள் தான் எனது முதல் எதிரிகள்" என்று அறிவித்திருக்கிறார். தேசீய ஏடுகளும் கொட்டை எழுத்தில் அவற்றை விளம்பரப்படுத்தியுள்ளன.

"முதல் எதிரி!" என்று பெயர் சூட்டிவிடுவதாலேயே ஒரு எதிர்க்கட்சியை அரசியல் உலகிலிருந்து அழித்துவிடலாமென்று ஆச்சாரியார் நினைத்தால் அது மிகவும் தப்புக்கணக்காகும். திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நம்மைப் பொறுத்தவரையில், ஆச்சாரியார் நமக்கோ, நமது நாட்டுக்கோ உற்ற நண்பர் என்றோ, நமது பணிகளைக்கண்டு வாழ்த்தி வரவேற்பார் என்றோ என்றும் நாம் எதிர்பார்த்தது கிடையாது. வர்ணாச்சிரமத்தையும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தையும் பாதுகாக்க—அவைகளின் பிரதிநிதியாக அவர் விளங்குகிறார். நாம் வர்ணாச்சிரமத்தையும், வடநாட்டு ஏகாதிபத்தியத்தையும் விரட்டியடித்தால்தான் திராவிடம் வளரும் வாழ்வும் பெறும் என்று கருதுகிறவர்கள். அடிப்படைக் கொள்கைகளிலேயே நமக்கும் அவருக்கும் வேறுபாடு—நிச்சயமாக பலத்த வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த வேறுபாடுகளை நாம் என்றும் மறைத்ததில்லை. நம்மை தனது முதல் எதிரிகளெனக் கூறுவதன்மூலம் ஆச்சாரியார் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளுகிறார்.

அரசியலில் காட்டவேண்டிய கண்ணியத்தின்படி, மாறுபட்ட கருத்துள்ளவர்களை—தனது கட்சிக்கு எதிராக இருக்கும் அரசியல் கட்சிக்காரர்களை, எதிர்க்கட்சியினர் என்று தான் குறிப்பிடுவது வழக்கம். ஆனால் கண்ணியம் என்பது இந்தக் கருப்புக்கண்ணாடிக்காரரின் கண்களுக்குத் தெரியாத காரணத்தால், அந்தப் பண்பு அவருக்குப் பழக்கமில்லாததால், எதிர்க்கட்சியினரை "எனது முதல் நம்பர் பகைவர்" என்று சொல்லுகிறார்.

முதலில் பொதுவுடைமைக் கட்சியினருக்கு அந்தப் பட்டத்தைச் சூட்டினாராம். இப்பொழுது அதை திராவிடர் இயக்கங்களுக்குச் சூட்டுகிறாராம். ஏதோ அந்தப் பெயர் அப்படியே அவர்களை அழித்துவிடும் என்ற எண்ணத்துடன். அந்த எண்ணம் அழிந்துவிடுமே

யன்றி, அவர் எண்ணுகிறபடி கழகம் அழிந்து விடாது.

ஆச்சாரியார் நம்மைப்பார்த்து "இவாளெல்லாம் நம்ம ஆப்த நண்பர்கள்!" என்று அருகே வந்தால்தான், ஏதோ ஆபத்து வருகிறதென்று நினைக்கவேண்டும். அப்படியின்றி வெளிப்படையாக "எனது பகைவர்கள்" என்று சொல்லியது ஒருவிதத்தில் நல்லது. கொல்லைப்புறமாக வீட்டுக்குள் நுழைந்த ஒருவன், கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு, கண்டவர்களை அடித்துவிட்டு, வெளியே வரும்பொழுது, "இதோ இவர்தான் என் நண்பன்" என்று யாராவது ஒருவரைச் சுட்டிக்காட்டிச் சொன்னால், "ஓகோ! இவனும் அவன்போல........" என்றுதான் மக்கள் நினைக்க ஆரம்பிப்பார்கள். அத்தகைய சங்கடமான நிலையை ஆச்சாரியார் நமக்குத் தரவில்லை.

அவர் செய்த கொடுமைகளுக்கு, தூவிய அடக்குமுறைகளுக்கு, ஏவிய சட்ட அம்புகளுக்கு, எடுத்த கடும் நடவடிக்கைகளுக்கு, அவருக்கு நண்பர்களாக நாம் இல்லை. மாறாக, அந்தக் கொடுமைகளைத் தாங்கிக்கொள்ளும் எதிரிகளாகவே விளங்கினோம். நம்மைப் பகைவர்கள் என்று கருதுவதால்தான், ஆறுபேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர், ஐயாயிரம்பேர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டனர். நூற்றுக்கணக்கான தோழர்கள் கை கால் ஒடிக்கப்பட்டும், மண்டை பிளக்கப்பட்டும் கிடக்கின்றனர்.

நம்மை அவர் பகைவர்கள் என்று கருதுவதால் தான், நமது தலைவர்களை சிறையில் விடாப்பிடியாக அடைத்து வைத்துள்ளார், தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை கடுமையான முறையில் நடத்திவருகின்றார். ஆந்திரா கிளர்ச்சியில் தண்டனை பெற்றவர்களையெல்லாம் விடுதலைசெய்த ஆச்சாரியார், ஆந்திரா ரயில் நிறுத்தத்தில் ஈடுபட்ட 301 பேர்கள்மீது இருந்த வழக்குகளையெல்லாம் வாபஸ் பெற்ற ஆச்சாரியார், திராவிட முன்னேற்றக் கழகத்தினரைச் சிறையில் வைத்தும், அவர்கள் மீது சதிவழக்குகளைத் தொடுத்துக்கொண்டும் இருப்பதற்குக்காரணம் "பகைவர்கள்" என்ற உணர்ச்சியில் பழிவாங்கும் எண்ணம்தான்.

நமது கழகத்தினரை ஆச்சாரியார் தமது "முதல் பகைவர்கள்" என்று கூறிவிட்டார்! போகட்டும், அவருடைய நண்பர்கள் யார்? என்று பார்க்கலாம்.

நாட்டை நாலு ஜாதியாகவும், நாலாயிரம் பிரிவுகளாகவும் பிரித்துவைக்கும் வர்ணாச்சிரமவாதிகள் அவருடைய நண்பர்கள்; நமது நாட்டைச் சுரண்ட வந்துள்ள வடநாட்டு முதலாளிகள் அவருடைய நண்பர்கள், சங்கராச்சாரி, ஜீயர்கள் அவருடைய நெடுநாளைய நண்பர்கள்; இப்பொழுது மடாதிபதியும், தம்பிரான்களும் அவருடைய நெருங்கிய நண்பர்களாகிவிட்டனர். டாடாவும், பிர்லாவும், டால்மியாவும், கொயாங்காவும் அவருக்கு வேண்டியவர்கள். செட்டிநாட்டு ராஜா ஒரு நண்பர். குதிரைப்பந்தய ராஜா மற்றொரு நண்பர். கள்ளமார்கட்காரர்கள், கொள்ளைலாபக்காரர்கள், காங்கிரஸ் ஆட்சியில் அவருக்கு நண்பர்களாகிவிட்டனர், கொடியுடன் தடிதூக்குவோர், எதிர்கட்சியினரைத் தனியாகக் கண்டவிடத்தில் கத்தியும் கம்புங்கொண்டு தாக்குவோர் அவருடைய நண்பர்கள். கொடுமையும், அடக்குமுறையும், துப்பாக்கியும், தடியடியும், இரத்தமும், வேதனையும் அவருடைய நன்மதிப்பைப் பெற்ற நட்புரிமைகளாகிவிட்டன.

அத்தகைய "நண்பர்கள்" குழுவில் நாமில்லாமல், "எதிரிகளாக" இருப்பது எவ்வளவோ மேல். வேண்டிப் பெறவேண்டியதாகும்.

அவர் நம்மை "எதிரிகள்" கூறிவிட்டபோதிலும், நமக்கு நண்பர்கள் இல்லாமற்போகவில்லை. அவருக்கு இருப்பதைப் போல பல்லக்கேறிவரும்பண்டாரசன்னதியும், தங்கப் பாதக்குறடு மின்னிட வரும் சங்கராசாரிகளும், பட்டாடைபோர்த்த ராஜாக்களும், பணத்திலே புரளும் கோடீசுவரர்களும் நண்பர்களாக இல்லாவிட்டாலும், ஏழைகள், பாட்டாளிகள், ஏக்கமுற்றோர், வாழ்க்கையில் வாட்டமுற்றோர், இரக்கமுடையோர், இதயமுடையவர்கள், மனிதப் பண்பை மறக்காதவர்கள் இவர்கள் ஏராளமாக, லட்சக்கணக்கில்—கோடிக்கணக்கில் நமது நட்புரிமையைப் பாராட்டி நிற்கின்றனர். அவர்கள் நமது நண்பர்கள். கருப்புக் கண்ணாடிக்காரர் நம்மைப் "பகைவர்கள்" என்று பழித்தபோதிலும், அந்த ஏக்கம் நிறைந்த கண்ணினருக்கு நம்பிக்கைத் தரும் நண்பர்களாகவே நாம் இருக்கிறோம்.

அந்த நட்பு நமக்கு ஆக்கம் தருவதாக! அந்த நம்பிக்கை நமக்கு ஊக்கமூட்டுவதாக!

பெற்ற தாயின் பெரு மகிழ்ச்சி!

தமிழரது வீரம் தலைசிறந்து விளங்கிய காலம் அது.

தமிழரின் படை வலிமை வடபால் சென்று, எதிர்நின்ற மன்னர்களை வென்று, இமயத்தையே முட்டி நின்றது.

சோழன் இமயத்தில் புலிபொறித்துத் திரும்பினான்.

பாண்டியர் தலைவன், ஆரியப்படைகளை, அவை அலறத்தாக்கி, வெற்றிகண்டுவந்தான்.

சேரனின் வேழப்படை கங்கையாற்றிலே விளையாடி வந்தன.

மார்பிலே வேல் தாங்கி, எதிர்வந்த வேழத்தின்மீது அந்த வேலைப் பிடுங்கி எறிந்து கொன்றிடும் வீரர்கள் இருந்தனர்.

இந்த மறவர்குடி மக்களை அவ்வாறு வளர்த்தவர்கள் வீரத்தாய்மார்களே. சதங்கை கொஞ்சும் பருவத்திலிருந்து, சத்தமிட்டுவரும் களிற்றை தாக்கிச் சாய்த்து, வீரக்கழலணியும் வரை வளர்ப்பவர்கள் தாய்மார்களே.

அத்தகைய வீரம் செறிந்த நாளில்—தமிழ்நாட்டு வீரர்கள் ஒரு கடும்போரில் ஈடுபட்டிருந்தனர், களம் தொட்டு நின்றனர். ஒருநாள் மாலை, போர்முடிந்து வீரர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

நரம்புகள் எழுந்து, தோல் மெலிந்து, முதுமையால் வாடிய கிழவி ஒருத்தி தன் மகனுக்காக எதிர்நோக்கிக்கொண்டிருந்தாள். மகனோ வரவில்லை. திரும்புகிற மறவர்களைக் கேட்டாள் "எங்கே என் மகன்?" என்று.

'உன் மகன் புறங்கொடுத்து ஓடினான், முதுகிலே புண்பட்டு மாண்டான்" என ஒருவன் சொன்னான்.

"என் மகன் புறங்கொடுத்தானா? ஐயோ! என் மகன் கோழையா?" எனக் கொதித்தெழுந்தாள் அவள்—கிழவிதான், ஆனாலும் மறக்குடியில்—தமிழர் குடியில் பிறந்தவள். "இதற்கோ அவனைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்தேன். கோழை! கோழை!! இஃது உண்மையாயின் அந்தக் கோழைக்குப் பாலூட்டிய என் மார்பை அறுத்தெறிவேன்" என முழக்கமிட்டாள். கூர்வாளை கையிலே எடுத்தாள், களம்நோக்கி நடந்தாள்.

இரத்தத்தில் தோய்ந்து களம் கிடந்தது. யானைத் தலைகளும், குதிரை உடல்களும், வீரர்களின் பிணங்களும் சிதறிக்கிடந்தன. கிழவி தன்னுடைய வாளால் பிணங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள் வெற்றிப் புன்னகையில் உறங்கிடும் வீரர்களைக் கண்டாள், தன் மகனை மட்டும் காணாள்.

கடைசியாக அந்தக் குவியலைப் புரட்டுகிறாள். அதோ! அவளுடைய கோழை மகன் கிடக்கிறான். வாளால் அவனை நிமிர்த்துப் பார்க்கிறாள்! மார்பிலே படுகாயங்கள், இரத்தம் வழிந்துகிடக்கிறது!

முதுகுப் பக்கம் பார்க்கிறாள்! காயமொன்றும் காணோம்!

அவன் கோழையல்ல வீரனே! புறங்கொடுத்து ஓடவில்லை, மார்பிலே புண்பட்டு மடிந்திருக்கிறான்!

வாளை வீசினாள், "அணையாத குலவிளக்கே, என் ஆசை மகனே!" என்று அந்த மாசற்ற வீரனை—மழக்களிறைக்கொன்று, மார்பிலே வேல் தாங்கி மடிந்த மறவனை, தாய் தழுவிக் கொள்ளுகிறாள், மகனைப் பெற்ற பொழுதை விட அதிக மகிழ்ச்சியுடன்.

இந்தக் காட்சி காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என்ற பெண்புலவர் பாடிய புறநானூறு 278-ம் பாடலில் இருக்கிறது.

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

தகுந்த வெகுமதி

ஒரு சிற்றூரில் மிகவும் உழைப்பாளியான ஒரு தோட்டக்காரன் இருந்தான். அவன் மிகவும் பாழடைந்திருந்த இடத்தை வாங்கி, அதைப் பண்படுத்தி, ஒரு வாழைமரத் தோட்டத்தை உண்டாக்கினான். தோட்டக்காரனின் சலியாத உழைப்பில், அந்தத் தோட்டம் நன்றாக செழித்தது. அவனுக்கு உதவியாக, அந்த ஊரில் இருந்த நாட்டாண்மைக்காரரும் இருந்தார்.

கடைசியாக, அந்தத் தோட்டத்து வாழை மரங்கள் குலைதள்ள ஆரம்பித்தன. அவற்றில் மிகப்பெரிய குலையொன்றை வெட்டியெடுத்து, ஊர்ப் பெரியவரான நாட்டாண்மைக்காரரிடம் தோட்டக்காரன் கொண்டுபோய் தந்தான். தோட்டக்காரனின் உழைப்பை மெச்சிய நாட்டாண்மைக்காரர், அவனுக்கு வெகுமதியாக ஒரு பத்து ரூபாய் பணத்தைக் கொடுத்தனுப்பினார். இதனால் மற்றவர்களும் ஊக்கமுடன் உழைத்து, கிராமத்தின் வளம் பெருகும் என்று அவர் நினைத்தார்.

தோட்டக்காரனுக்குப் பத்து ரூபாய் கிடைத்தது என்ற விபரம் ஊர் முழுவதும் பரவியது. வாழைத்தோட்டத்துக்குப் பக்கத்தில் இருந்த ஒருவன்—அவன் மிகவும் சோம்பேறி—அவனுக்கு இந்தச் செய்தி ஆச்சரியத்தையும், தோட்டக்காரன்மேல் பொறாமையையும் மூளச்செய்தது. "சரி, இந்த வாழைக் குலைக்கே அவர் பத்துரூபாய் பணம் கொடுத்தாரே! நான் ஒரு கொழுத்த ஆட்டைக் கொண்டுபோய் தருகிறேன். அதிகப்பணம் நிச்சயமாகக் கிடைக்கும்" என்ற பேராசையுடன், தன்னிடமிருந்த ஆடுகளில் ஒன்றைப் பொறுக்கி எடுத்துக்கொண்டுபோய், ஊர்த் தலைவரிடம் கொடுத்தான்.

இந்தச் சோம்பேறி தனக்கு ஏன் ஒரு ஆட்டை காணிக்கையாகத் தருகிறான் என்பதை ஊர்த்தலைவர் வெகு சுலபத்தில் புரிந்துகொண்டார். அதனால் "ஆடு நன்றாக வளர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் நீயே அதை வைத்துக்கொள். எனக்குத் தரவேண்டாம்!" என்று திரும்பியனுப்பிவிடப் பார்த்தார்.

ஆனால் சோம்பேறி விடுவதாயில்லை. "நான் பாடுபட்டு வளர்த்தது இது. அந்த உழைப்பின் பலனை, ஊர்ப் பெரியவராகிய உங்களிடம் காணிக்கையாக்குவதுதான் முறை" என்று சோம்பேறி கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

ஊர்த்தலைவரும் ஒப்புக்கொண்டு, ஆட்டைப் பெற்றுக்கொண்டு, வெகுமதி என்ன கொடுக்கலாம் என யோசித்தார். கடைசியாக, "நீ வற்புறுத்துவதால், நான் இதை எடுத்துக்கொள்ளுகிறேன். உன்னுடைய உழைப்புக்குத் தகுதியான முறையில் நான் வெகுமதியளிக்கவேண்டும். ஆதலால், இந்த ஆட்டின் விலையைப் போல் இரண்டுமடங்கு அதிகமான விலை கொடுத்து வாங்கிய இதை வாங்கிக்கொள்!" என்று தோட்டக்காரன் தந்துவிட்டுப் போன வாழைக்குலையை எடுத்து, சோம்பேறியிடம் ஊர்த்தலைவர் தந்தார்!

★★

தனிமை

நாடகம் ஒன்றுக்குப் பிரமாதமாக விளம்பரம் செய்யப்பட்டு இருந்தது. அதை நம்பி முதல் நாள் இரவு நல்ல கூட்டம் கூடிவிட்டது. ஆனால் எதிர்பார்த்தபடி, நாடகம் நன்றாக அமையவில்லை. நடிப்பு மகா மட்டமாக இருந்தது. அதனால் கொட்டகையில் கூச்சலும், குழப்பமும் அதிகரித்தன. சீழ்க்கையும், கைதட்டலும் நாடகப் பேச்சுகளைக் கேட்கவொட்டாமல் செய்தன.

நாடகத்தில் வழக்கம்போல் காதல் பூத்து, கரடுமுரடான பாதைகளைத் தாண்டி, பயங்கரத் தடைகளை மீறி, கடைசியாக வெற்றியடையும் கட்டம் வந்தது. காதலன், காதலியைப் பார்த்து, "இன்னுயிர்க் காதலி! கடைசியாக நாமிருவரும் தனியே இருக்கிறோம்" என்று அணைத்துக்கொள்ளப் போனான்.

உடனே தரையிலிருந்து "இல்லை, இல்லை. நீங்கள் இன்று தனியாக இல்லை. நாளையதினம் நிச்சயமாகத் தனியாக இருப்பீர்கள்" என்று ஒரு குரல் வந்தது.

பேரணைகள்

★ பொறியியலான் ★

3

3.1. ஆறுகளின் குறுக்கே, அணைகளோ பேரணைகளோ கட்டுவதற்கு வேண்டிய அவசியங்களும், கட்டுவதால் கிடைக்கும் பயன்களும் சென்ற கட்டுரையில் விவரிக்கப்பட்டன. இக்கட்டுரை பேரணைகளைப்பற்றிச் சிறிது விவரமாகக் குறிப்பிடும். பொதுவாக, நீர் சேமிப்பு திட்டங்களைப் பின் கண்டவாறு பிரிக்கலாம்:—

1. நீர்ப்பாசனத் திட்டங்கள் (Irrigation Projects), 2. புனல் மின்சாரத் திட்டங்கள் (Hydroelectric Projects), 3. வெள்ளத் தடுப்புத் திட்டங்கள் (Flood Control Projects), 4. பல நோக்குத் திட்டங்கள் Multi-purpose Projects).

3.1.1. நீர்ப்பாசனத் திட்டங்கள்:—இத்திட்டங்கள்தாம் உழவு நாடாகிய திராவிடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. வறண்ட காலங்களில் கழனிகளுக்கு நீர் கொடுத்து உதவுவதற்காகவே இத்திட்டங்கள் இயற்றப்படுகின்றன. நீர்ப்பாசனத் திட்டங்களும் பெருந் திட்டங்கள் (Major Projects) எனவும், சிறு திட்டங்கள் (Minor Projects) எனவும் பிரிவுபடும். பேரணைத் திட்டங்கள் பெருந் திட்டங்களாகும். அணைகள், ஏரிகள், குளங்கள் பற்றிய திட்டங்கள் சிறு திட்டங்களாகும். உதாரணமாக மலம்புழா பேரணைத் திட்டம் ஒரு பெருந் திட்டமாகும். குளங்கள் உயிர்விப்புத் திட்டங்கள் (Tank Restoration Schemes) சிறு திட்டங்களாகும். அணைத் திட்டங்கள் திராவிட நாட்டிலே மிகத் தொன்மையிலும் இயற்றப்பட்டன எனத் தெரிய வருகிறது. சோழர்கள் கொள்ளிடத்தின் குறுக்கே கட்டியுள்ள கல்லணை *தி. பி. 2-ம் நூற்றாண்டில் எழுந்ததாகும்.

3.1.2 புனல் மின்சாரத் திட்டங்கள்:—பேரணையினால் தேக்கப்பட்ட நீரை, நீர்க் குழாய்கள் (Penstocks) வழியாக, வெகு வேகமாக விடுவிப்பதால் கிடைக்கும் இயங்கு சக்தியை (Kinetic Energy), நீரியங்கிகளும் (Water Turbines), மின்னாக்கிகளும் (Generators) ஒன்று சேர்ந்து மின்சக்தியாக (Electrical Energy) மாற்றுகின்றன. இவ்வாறு கிடைக்கும் மின்சாரத்தின் உதவியால் தொழிற்சாலைகளை ஓட்டவும், நகரங்களுக்கு ஒளியிடவும், மின்வண்டிகளை (Electric trains) இயக்கவும் முடிகிறது. கிராமங்களிலே காணப்படும் ஆயிரக்கணக்கான மின்சாரப் பம்புகள் கிணறுகளிலிருந்து தண்ணீரை உறிஞ்சி வயல்களுக்குப் பாய்ச்சுகின்றன. மின்சக்திக்காகவே இயற்றப்படும் புனல் மின்சாரத்திட்டங்கள் பாபநாசம் திட்டம், பைகாரா திட்டம், மோயார் திட்டம், மச்கண்ட் திட்டம் போன்றவை நம் நாட்டில் தலைமையானவை.

3.1.3. வெள்ளத்தடுப்புத் திட்டங்கள்:—ஆறு அடித்து வரும் வெள்ளம் அனைத்தையும் முன்னேயே தேக்கி பேரணைக்குப்பின் வெள்ளத்தைச் சிறிது சிறிதாக விடுவதற்காக இந்தத் திட்டங்கள் பயன்படுகின்றன. இத்திட்டங்களுக்கு, பேரணைக்கு முன்னுள்ள தேக்கு தளம் (Storage pond) அதிக அளவுள்ளதாக இருப்பது மிக அவசியம். இல்லாவிட்டால் வரும் வெள்ளம் பேரணைத்தலைமட்டம் வரை நீரை அதிதுரிதமாக நிரப்பிவிட்டு, அணை மேலெழுந்தோ அல்லது மதகுகள் வழியாகவோ ஓடும். அதனால், பேரணை கட்டப்படுவதற்கு முன்னால் பாதிக்கப்பட்ட நிலங்களும், ஊர்களும் மறுபடியும் பாதிக்கப்படும். உதாரணமாக, மேட்டூர் அணைத்திட்டம், நீர்ப்பாசன புனல் மின்சார திட்டமேயன்றி, வெள்ளத் தடுப்புத்திட்டமல்ல. ஆகையினால்தான் சிறிது நாட்களுக்கு முன் திருச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளச்சேதங்கள். அணை கட்டியும் பயனில்லை என்று பேசும் மக்களுக்கு இது நிலைமையை விளக்கும். வெள்ளத்தடுப்பு திட்-

* தி. பி......திருவள்ளுவருக்குப்பின். உதாரணமாக இவ்வாண்டு சுமார் தி. பி. 1984 என்க.

டங்கள் கட்டுவதற்கேற்றபடி திராவிட நாட்டின் இயற்கையமைப்பு இல்லை. மேலும் நமது ஆறுகளில் எழும் வெள்ளங்கள் மிகப்பெரியனவும் அல்ல. அதனாலும், வெள்ளத்தடுப்புத் திட்டங்கள் கட்ட மிகப்பெரிய பணத்தொகை வேண்டியிருப்பதாலும்தான் நம் நாட்டில் இத்திட்டங்கள் இயற்றப்படவில்லை போலும்.

3.1.4. பல நோக்குத் திட்டங்கள்: மேற்கண்ட எல்லாகாரணங்களுக்காகவும், மற்றும் உள் நாட்டுக்கப்பல்கள் போக்கு வரத்துக்காகவும், மீன் வளர்ச்சிக்காகவும், இயற்றப்படும் நீர் சேமிப்புத்திட்டங்கள் இவை. இத்தகைய திட்டங்கள் திராவிட நாட்டிலே கிடையா. தாமோதரப்பள்ளத்தாக்குத்திட்டம், கோசி திட்டம், ஹிராகுட் திட்டம் போன்றவை இந்திய உபகண்டத்தில் முக்கியமானவை. இத்திட்டங்களினால் போட்ட பணத்துக்கு ஏற்ற வருவாய் கிடைக்க ஏதுவாகும்.

3.2. பலவகைத் திட்டங்களைப்பற்றிப் பார்த்தோம். இப்பொழுது பேரணைகளைப்பற்றி ஆராய்வோம். பேரணைகளிலும் பிரிவுகள் சிலவுள: மண்ணணை (Earth Dam) எனப்படுவது அணையிடத்தில் கிடைக்கும் மண்ணைக் கொண்டே கட்டப்படும் பேரணையாகும். தண்ணீர் அணையூடே ஒழுகிவிடாதவாறு மண்ணணையின் மைய பாகம் களிமண்ணால் நிரப்பப்படும். கருங்கல்லினாலோ, கான்க்ரீட்டினாலோ கட்டப்படும் பேரணையை கல்லணை எனக்கூறுவதில் தப்பொன்றுமில்லை. இதற்கு ஆங்கிலத்தில் Masonry Dam என்று பெயர். பேரணைகள் கட்டும் விதத்தைப் பொறுத்து, நேரணைகள் (Straight Dams), வளைவணைகள் (Curved Dams) எனவும், கட்டும் அடிப்படை உண்மைகளைப் பொறுத்து பளுவணைகள் (Gravity Dams); வில்லணைகள் (Arched Dams). முட்டணைகள் (Buttress Dams) எனவும் பிரிக்கப்படுகின்றன.

3.3. ஒரு பேரணையின் முக்கிய அங்கங்கள் பின்கண்டவாறு:—

1. தேக்கங்கள் (Bulkhead): கல்லாலோ, கான்க்ரீட்டாலோ கட்டப்பட்டு, நீரைத் தேக்குவதே இதன் தொழிலாகும். பெரும்பாலும், தேக்கங்கத்தில் தான் கால்வாய்களுக்கு வேண்டிய மதகுகள், வெள்ளம் விடுவிக்கும் மதகுகள், மின்சாலைக்குச் செல்லும் நீர்க் குழாய்கள் முதலியன பொருத்தப்படும்.

2 கால்வாய் மதகுகள் (Canal Sluices): இம்மதகுகள் வழியாகவே கால்வாய்களுக்குத் தண்ணீர் செல்லும். வேண்டிய நீரின் அளவைப் பொறுத்து மதகுக் கதவுகளை மூடியோ திறந்தோ தண்ணீர் அனுப்பப்படும்.

3. நீர்க்குழாய்கள் (Penstocks): மின்சக்தி எடுப்பதற்காக நீரை மின்சாலைகளுக்குக் கொண்டு செல்லும், வட்டக் குழாய்கள் இவை. 5 அடியிலிருந்து 40 அடிவரைகூட இவைகளின் விட்டம் இருக்கும்.

4. வெள்ளநீக்கி (Flood Escape):—பேரணை தேக்குவதற்கு முடிந்தவரை தேக்கிய பின் கூட வெள்ளம் புரண்டு வருவது சாதாரணம். வெள்ளத்தை, பேரணைக்கு முன்னோட்டத்தில் ஒரு குறிப்பிட்ட மட்டத்துக்கு மேல் ஏற விடக்கூடாது. இந்த மட்டத்துக்கு மிகுதி வெள்ள மட்டம் (Maximum flood level) எனப் பெயர். இந்த மிகுதி வெள்ள மட்டத்துக்கு மேல் சுமார் 5 அடியிலிருந்து 10 அடிக்குள் பேரணையின் தலை மட்டம் இருக்கும். இந்த மீதி நீரை பேரணைக்கு பின்னோட்டமாக விடுவிப்பதற்கு வெள்ளநீக்கி உபயோகப் படுகிறது. இது பல வகைப்படும், (i) அலர்பு பாதை (Spillway): ஆற்று வெள்ளத்தின் தலையளவு, மிகுதி வெள்ள மட்டத்திற்குக் கீழே, அலம்புபாதையின் தலைமட்டம் இருக்கும். அலம்புபாதை பேரணை நெடுக்கில் ஒரு பகுதியில் இருக்கும். (அணைகளின் அலர்பு பாதைக்குக் "கலங்கல்" என்று கூறுவர்). ஆகையால் வெள்ள மட்டம் இதன் தலை மட்டம் வந்தவுடனேயே, மேல் வழிந்து பேரணைக்குப் பின்னோட்டமாகச் சென்று விடும். இந்த வெள்ளத்தையும் விடுவிக்க எண்ணமில்லாவிட்டால் தடுப்பதற்காக அலர்புபாதையின் மேல் கதவுகள் நிறுவப்படும். இப்பொழுது, நீர், மிகுதி வெள்ள மட்டம் அடைந்தவுடன், இக்கதவுகள் திறக்கப்பட்டு வெள்ளம் விடுவிக்கப்படும். (ii) ஆற்று மதகுகள் (River Sluices): இவைகள் வெள்ள நீரை பேரணையின் தேகத்தின் வழியாக அனுப்பி, வெள்ள மட்டம், மிகுதி வெள்ள மட்டத்துக்கு மேல் ஏறிவிடாதவாறு உதவுகின்றன. (iii) உறிஞ்சிகள் (Siphons): வெள்ள நீரை உறிஞ்சி வெளித்தள்ளுகின்றன இவை. இவைகள் இயங்கும் விதத்தை விவரிப்பது இக்கட்டுரையின் நோக்கத்திற்படாது. (தொடரும்)

விரைவாகப் படித்தல்

விரைவாக ஆனால் தெளிவாகப் படித்தல் என்பது ஒரு சிறந்த கலையாகும். படித்தல் என்று கூறும்போது வாய்விட்டுப் படித்தல் என்பதை மட்டுமே இங்குக் குறிப்பிடவில்லை; படித்தறிதல் என்பதையும் உள்ளடக்கித்தான் குறிப்பிடுகிறோம்.

விரைவாகவும் தெளிவாகவும் படித்து அறிந்து கொள்ளுதலில், முழுக்கவனம் செலுத்தாதவர்கள், வாழ்க்கையில் மேலோங்கிச் செல்பவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ள முடிவதில்லை. எங்ஙனும் தோல்வியே அத்தகையோர்க்கு எதிர்ப்பட்டு நிற்கும்.

ஆட்சித்துறையாலும், ஆணைசெலுத்தும் பதவியாலும், அலுவலகப் பணியாலும், ஆசிரியர் வேலையாலும், விளம்பரத் தூதுவராலும், வியாபாரத் தரகராலும் படித்தறிந்துகொள்ளும் பண்பு மிகமிக வேண்டற்பாலதாகும் இற்றைநாளில்.

சமுதாய வளர்ச்சியில் அக்கறை கொண்ட அமெரிக்க அறிஞர்கள், உயர்நிலைப்பள்ளிவரை படித்து முடித்துவிட்டு சாதாரண வேலைகளில் அமர்ந்திருக்கும் இளைஞர்களில் சுமார் 2000 பேரைப் பொறுக்கி அவர்களுடைய அறிவு ஆற்றல், திறன் ஆகியவைபற்றி ஆராய்ச்சி செய்தார்களாம். அவர்கள் எல்லோரும் போதுமான அளவு அறிவும், படிப்பும் பெற்றவர்களாக இருந்தும், அவர்கள் உயர்வான நிலைமைகளுக்குப் போகமுடியாமல் தாழ்ந்த அலுவல்களில் படிந்திருப்பதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்தார்களாம். அவர்களில் சுமார் நூற்றுக்குப் பத்துப் பேர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் தெளிவாகப் படித்தறிபவர்களாகவோ ஆழ்ந்த கவனம் செலுத்துபவர்களாகவோ காணப்படவில்லை. நன்றாகப் படித்தறிந்துகொள்ள முடியாத குறையே, அவர்கள் மேம்பாடு எய்துவதற்கான வாய்ப்புகளை அளிக்கவில்லை என்ற முடிவுக்கு அந்த அறிஞர்கள் வந்துள்ளார்கள்.

தெளிவாகப் படித்து அறிந்துகொள்ள முடியாத பண்பினாலே ஏற்படும் குறைகள் பற்றி அறிஞர்கள் வெளியிட்ட அறிக்கையைக் கண்ட, ஹார்வார்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் "விரைவாகப் படித்தல்" (Read faster) என்ற குழு ஒன்றை அமைத்துக்கொண்டு பயிற்சி பெறத் தொடங்கியுள்ளார்கள். அமெரிக்க அரசாங்கம், தன் பொது அலுவலகத்தில் வேலைபார்க்கும் சில ஆணையாளர்களைப் பொறுக்கி எடுத்து, 'விரைவாகப் படிக்கும்' பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்பி வைத்தது.

"படித்தல் முழு மனிதனை உருவாக்குகிறது" (Reading maketh a full man) என்பது பேக்கன் என்ற ஆங்கில அறிஞர் கூறிய பொன்மொழி. "கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும், அவையல் லவேநன் மரங்கள்—சபைநடுவே, நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய, மாட்டாதான் நன்மரமா வான்" என்பது பழம்பாடல். விரைவாகப் படித்தறிதல் சிறந்த திறமையின் அறிகுறியாக ஆகிவிட்டது.

உலகம் மிக விரைந்து சென்று கொண்டிருக்கிறது. படிக்க வேண்டிய புத்தகங்களும், செய்தித்தாள்களும், கருத்திதழ்களும் ஆயிரக் கணக்கில், இலட்சக் கணக்கில் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. அலுவலங்களில் அன்றாடம் பார்த்து முடிவு செய்ய வேண்டிய செயல்கள் ஆயிரக்கணக்கான பக்கங்களில் விரிந்து கிடக்கின்றன. விரைவாகப் படித்தறியும் பழக்கத்தையும், பண்பையும் பெற்றாலல்லது ஒவ்வொருவனும் இன்றைய உலகில் தன் கடமையைச் செவ்வனே செய்து முடிக்க இயலாது.

இற்றை நாட்களில் ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் அமைச்சர் போன்றார்கள், தம்மிடம்வந்து சேரும் குற்றங்—குறை விண்ணப்பங்களையும்,

தாம் வெளியிடப் போகும் கட்டளைகளையும் தெளிவாகவும் விரைவாகவும் படித்தறிந்து கொள்ளும் பழக்கம் கொண்டிருந்தால் மட்டுமே திறமையான ஆட்சியை நடத்த இயலுகிறது என்பது கண்கூடு.

விரைவாகப் படித்தறிதல் என்பது பழக்கப் பயிற்சியின் காரணமாகப் பற்றித்தான் "செந்தமிழும் நாப் பழக்கம்" என்று கூறினார் ஔவையாரும்.

மெதுவாகப் படித்தலுக்குச், சிறுபிள்ளை பருவத்தில் ஏற்படும் பார்வைக்கோளாறும், கேள்விக் கோளாறும் காரணங்களாகக்கூடும். தைராய்டு கிளாண்டு (Thyroid gland) என்ற தொண்டைக்குழி உறுப்பு ஒன்று கோளாறு அடைவதன் காரணமாகவும் ஒருவன் படிக்க முடியாமற் போய்விடக்கூடும்.

சிறுபிள்ளைகளாக இருக்கும் போது வீட்டில் மற்றவர்களோடு ஏற்படும் தகராறு காரணமாகவும், மற்றவர்களோடு கலந்து வாழக் கற்றுக்கொள்ள முடியாத தன்மை காரணமாகவும், மகிழ்ச்சியற்ற குடும்ப வாழ்க்கையின் இடையிலே வாழ்வதன் காரணமாகவும், உடன் பிறந்தார்களோடு சண்டை யிட்டுக்கொண்டு எப்பொழுதும் படிக்க உட்காருவதன் காரணமாகவும் விரைவாகப் படிக்கும் பழக்கத்தைச் சிலர் பெற்று விடுகிறார்கள். இது வேண்டாத சூழ்நிலையில் உருவாகிறது என்றாலும், இளம் பருவத்தில் ஏற்படும் மெய்ப்பாட்டுணர்ச்சி (Psychology) யின் விளைவாகும்.

எழுத்துக் கூட்டியோ தட்டுத்தடுமாறியோ, விட்டுவிட்டோ, நிறுத்தி நிறுத்தியோ படிக்கும் பழக்கமுடைய வயதுவந்தோர் முயன்றால் தம்முடைய குறைபாடுகளைப் பெருமளவுக்குப் போக்கிக் கொள்ளலாம்.

ஒரு செகண்டின் (ஒரு நொடி) ஒரு பகுதி நேரத்தில் கண்ணானது மூன்று அல்லது நான்கு சொற்களைக் கவனிக்க முடிகிறது. ஒரு சொல்லுக்கும் இன்னொரு சொல்லுக்கும் இடையில் சிறிது நேரம் நிறுத்திப் பிறகு அடுத்த சொல்லைப் பிடித்து, மீண்டும் நிறுத்தி இப்படியாக வாக்கியம் முடியும் வரையில் செல்லும், மண்புழு நகருவதுபோன்ற பழக்கத்தை வழக்கத்தில் கொண்டுவந்து விட்டவர்கள் நீண்ட நேரத்தை வீணாக்க வேண்டியவராகிறார்கள். சீரான முறையில், வரிக்குவரி, கண்ணினால் தாவும் பழக்கத்தைக் கொண்டு வந்தாலொழிய, இக்குறைபாடு நீங்காது.

மெல்லப்படிக்கும் குறைபாட்டைப் போக்க அமெரிக்காவில், கருவி ஒன்று கண்டு பிடித்திருக்கிறார்கள். அது கண்ணை ஓரிடத்திலே மட்டும் ஆழ்ந்து கவனிக்கச் செய்யும். கண்ணானது படித்தசொற்களையே மீண்டும் படிக்கத் திரும்பாதபடி, அந்த கருவி கண்ணைத் தடுத்துக் கொள்வதால், பெரும்பாலான நேரம் சேமிக்கப்படுகிறது.

நேரம் வீணாகாமல் பாதுகாக்க, கண்ணை முதலில் ஒருவரியின் நடுப்பகுதியில் பொறுத்தி வைத்துக் கொண்டு, வரியின் இரண்டு பக்கத்தையும் சம அளவில் பார்த்துக்கொள்ளும் படியான பழக்கத்தைக் கொண்டுவரவேண்டும். கண்ணை சொற்களோடே அழைத்துக் கொண்டு போவதால் அதிகமாக வீணாக்கப்படும் நேரம், கண்ணை நடுவே நிறுத்தி வைத்துக் கொள்வதால் காக்கப்படுகிறது.

பொதுவாகப் பார்த்தால் நடைமுறையில் நன்றாகப் படிக்கும் ஆற்றல் பெற்றவர் நிமிடம் ஒன்றுக்கு 350 சொற்களைப் படிக்க இயலும். நல்ல சுருக்கெழுத்தாளர்கள் ஒரு நிமிடத்தில் 180 லிருந்து 200 வரை சொற்களைக் குறிப்பெடுத்துக்கொள்ள முடிகிறது.

அமெரிக்காவில் பயிற்சியின் காரணமாக பாங்குகளின் அலுவலாளர் குழு ஒன்றின் இணைந்திருப்பவர்கள், நிமிடத்திற்கு 275 சொற்கள் படிக்கத் தெரிந்தவர்கள் 450 சொற்கள் படிக்கக் கற்றுக் கொண்டார்கள். அது போலவே அரசாங்க அலுவலாளர்கள் சிலர் நிமிடத்திற்கு 292 சொற்களிலிருந்து 488 சொற்கள்வரை பேசக் கற்றுக்கொண்டார்களாம்.

விரைவாகப் படிப்பதற்குக், கண் பார்வையோடு மனவுணர்ச்சியும் தேவைப்படுவதாகும். இரண்டும் பயிற்சியின் காரணமாகப் போதுமான அளவு இணைந்தனவாக ஆகிவிட வேண்டும். அச்சம், அதிர்ச்சி, தாழ்வு மனப்பான்மை, பேரொளிகளைக் காண்டல் ஆகியவை காரணமாகக் கண் பார்வை கெட்டு விடக்கூடும். கண் பார்வை கெடாமலும், மனம் சோர்வடையாமலும் பார்த்துக் கொண்டால், பேக்கன் கூறியது போல ஒருவர் தம்மை 'முழு மனிதன்' ஆக்கிக்கொள்வதற்கான எல்லா வாய்ப்புகளையும் எளிதில் அடையலாம்.

செல்வியைத் தேடிய செவிலி

தன் அழகுக்கு இந்த அவனியில் எவரும் நிகரில்லை என்னும்படி அவள் வளர்ந்து வருகிறாள். செல்வக் குடியில் பிறந்த ஒரே மகளாதலால், அவளைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கச் செவிலித்தாய் ஒருத்தியும், அவளிட்ட வேலைகளைச் செய்து முடிக்கப் பல பணிப் பெண்களும், அவளுடன் இருந்து விருப்பியவற்றைப் பேசி மகிழ்வதற்குத் தோழி ஒருத்தியும் இருந்து வருகிறார்கள்.

தலைவியினுடைய அழகு கெடாத வகையிலும், வனப்பு வளரும் விதத்திலும், நலங் குறையாத முறையிலும், பொலிவு பெருகும் வண்ணமும் கடமையாற்றி வருவதிலே, கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறாள் செவிலித்தாய். முகம் மலர்ந்து, மணம் பரப்பி, தென்றலின் வரவை எதிர்பார்த்திருக்கும் வண்ண மலரே போல், அந்த நங்கை நல்லாள் காட்சியளிக்கிறாள்.

ஒருநாள் அவ்வூரைச் சார்ந்த கட்டிளங் காளையொருவன் அவள் கண்ணிலே தட்டுப்படுகிறான். அவனும் அவளைக் கண்டு மயங்குகிறான். காதலொளிக் கதிர்கள், இருவர் கண்களினின்றும் எழுந்து, ஒன்றையொன்று தாவிப் பிடித்துக் கட்டித் தழுவி சிறிது நேரம் நிற்கின்றன; ஒன்றோடொன்று பேசுகின்றன! கண்ணால் எடுத்த உடலோவியப் படத்தைத், தங்கள் தங்கள் உள்ளத்திலே இருத்திக் கொண்டு, அவர்களிருவரும் போய்விடுகிறார்கள். பிறகு தோழி இடையே தூதுபோய் வருகிறாள். தலைவனும் தலைவியும் ஊரார் அறியாமல், வீட்டார் அறியாமல் தனியே கண்டு கொள்கிறார்கள்; காதல் மொழி பேசுகிறார்கள் அகமகிழ்ந்திருக்கிறார்கள்!

தலைவியின் தோற்றத்தில் என்றும் ஏற்படாத சிறு மாறுபாடுகள், சிலநாட்களாக ஏற்படுவதைச், செவிலித்தாய்க் கூர்ந்து கவனிக்கிறாள். தலைவிக்குச் செய்துவிடும் கோலமெல்லாம் காலையில் சீரழிந்து கிடப்பதையும், பொலிவுடைய அவளுடைய முகத்திலே ஒருவித மாறுதல் தென்படுவதையும் காணுகிறாள். தலைவியின் நடத்தையில் ஐயங்கொள்கிறாள். செவிலித்தாய் தலைவியையும், தோழியையும் மாறுதல்களுக்கான காரணம் பற்றி வினவுகிறாள். அவர்கள் இருவரும் ஏதும் அறியாதவர்கள்போல் நடந்து கொள்கிறார்கள்.

தனக்கும் தலைவனுக்கும் ஏற்பட்டிருக்கும் காதலுறவைச் செவிலித்தாய் அறிந்துவிட்டால், அவள் தன் பெற்றோர்களுக்கு அதைக் கூறிவிடுவாள்; பெற்றோர் இந்தச் செய்தியை அறிந்தால், காதலனை இனிப் பார்க்க வொட்டாமல் தடுத்துத் தன்னையும் தண்டிப்பார்கள் என்று கருதி, இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் ஆளாகாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தலைவி வழியொன்று தேடுகிறாள்.

காதலனும் காதலியும் கூடிக் கலந்து, தாய் தந்தையர்க்குத் தெரியாமல், இரவோடிரவாய், வேற்றூருக்குப் போய்விட முடிவு செய்கிறார்கள். ஒருநாள் இரவு, பெற்றோர், செவிலித்தாய் ஆகியோரை ஏமாற்றிவிட்டுத், தலைவி வீட்டை விட்டுக் கிளம்பி, தலைவன் காத்திருக்கும் இடம் போய் சேர்கிறாள். பின்னர் காலந் தாழ்த்தாமல் இருவரும் ஊரைவிட்டு நடந்தே போய்விடுகின்றனர்.

காலையில் எழுந்தவுடன் செவிலித்தாய் தலைமகளைக் காணாமல் பதை பதைத்து ஓடியாடிச் சுற்று முற்றும் பார்க்கிறாள். தோழியைக் கேட்கிறாள்; தான் ஏதும் அறியவில்லையே என்று நடிப்புடன் கலங்குகிறாள். செய்தியைத் தாய் தந்தையரிடம் தெரிவிக்கிறாள்; அவர்கள் மனங் கலங்குகிறார்கள், துடி துடிக்

கிறார்கள். அப்பொழுது மற்றொருத்தி இரவிலிருந்து தன் மகனைக் காணவில்லை என்று கலக்கத்துடன் வந்து யாரேனும் பார்த்ததுண்டா வென்று வினவுகிறாள். அந்தச் செய்தியைக் கேட்டதும், தலைவியும் அவனுந் தாம் எங்கேயோ ஓடியிருக்க வேண்டும் என்ற முடிவுக்குச், செவிலித்தாயும் ஏனையோரும் வருகிறார்கள். "அப்பொழுதே நான் ஐயப்பட்டேன்!........அவளும் அவனும் பிறரறியாமல் தங்களுக்குள்ளாகவே கூடிக் கலந்து இதுநாளெல்லாம் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள்! பாவி நான் அப்பொழுதே தடுத்து நிறுத்தாமல் போனேனே!...இப்பொழுது எல்லோரும் அறியும்படியாக இணைபோட்டுக் கொண்டு போய்விட்டார்களே!...." என்று செவிலித் தாய் அங்காலாய்க்கிறாள்.

பிறகு வருத்தத்தை அடக்கிக்கொண்டு எழுந்து, "இப்பொழுது எங்கே எவ்வளவு தூரம் போய்விட்டிருக்கப் போகிறார்கள்? நான் போய்அழைத்துக்கொண்டு வருகிறேன், பாருங்கள்" என்று சொல்லிவிட்டு, அந்த வளர்ப்புத் தாய், தனிவழியே விரைந்து செல்கிறாள்.

ஊரெல்லாங் கடந்து, தோப்புத் துறவுகள் கடந்து, பாழ்வெளிப்பாதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாள்; தன் செல்வ மகளையும் அந்தக் காதலனையும் அவளால் காண முடியவில்லை. செவிலித்தாய் தன் எதிரே துறவி ஒருவர் வந்து கொண்டிருப்பதை உற்றுக் கவனிக்கிறாள் அந்தத் துறவி, கமண்டலத்தை உறியிலே வைத்து, அந்த உறியை முக்கோலிலே கோர்த்துத், தோளிலே சாய்த்துக் கொண்டு அந்தக் கோலை ஒரு கையாலே பிடித்துக்கொண்டும், மற்றொரு கையாலே, கொளுத்தும் ஞாயிற்றின் வெய்யலைத் தடுக்கக் குடையொன்றை யேந்தி, அதன் நிழல் தம்மேல் படும்படி செய்து கொண்டும் நகர்ந்து வந்து கொண்டிருக்கிறார்.

"பெருமானே" என்று சொல்லிச் செவிலித் தாய் அந்தத் துறவியின் முன் வணங்கி நிற்கிறாள் "அம்மையே! வாழி!" என்று சொல்லித் துறவி வாழ்த்துகிறார்.

"அந்தணரே! நீங்கள் வந்து கொண்டிருக்கும் இக்காட்டின் வழியிலே, என்னுடைய மகளொருத்தியும், வேறொருத்தியின் மகன் ஒருவனும் சேர்ந்து போய்க் கொண்டிருக்கிறார்களா? பெருமானே! எங்கேனும் அவர்களை நீங்கள் கண்டதுண்டா? இப்படிப்பட்ட வெய்யல் நிறைந்த கொடிய காட்டின் வழியே அடிக்கடிப்போய்வரும் தன்மையுடையவராக நீங்கள் இருத்தலால் தான், உங்களை கேட்கிறேன்" என்று கெஞ்சுங்குரலில் வினவுகிறாள் செவிலித்தாய்.

"நீங்கள் என்ன அந்த பெண்ணுக்குத் தாயாரா?" என்று கேட்கிறார் துறவி.

"அல்ல பெருமானே! நான் அவளுக்கு நற்றாய் அல்ல: அவளுக்கு வளர்ப்புத் தாய" என்று விடையிறுக்கிறாள் செவிலி.

"உங்களுடைய மனநிலையைப் பார்த்தால் தாயார் போலவே காணப்படுகிறீர்கள்!" என்று கூறுகிறார்.

"எனக்கு அவளே மகள்; அவளுக்கு நானே தாய்; அப்படிதான் வாழ்ந்து வந்தோம், அடிகளாரே!" என்று கூறி "எங்கேனும் அவர்களை நீங்கள் காண்பீர்களோ?" என்று பதைபதைக்க வினவுகிறாள்.

"வரும் வழியில், இக்காட்டிடையில், அவர்களை யாம் கண்டோம். ஆண்மக்களுக்குக் கூறக் கூடிய அழகுமுழுவதையும் உடையவனாக அவன் காணப்பட்டான். அவளோ, மாட்சிமைப் பட்டவளாகவும், மடப்பம் பொருந்தியவளாகவும், நகைகளை அணிந்தவளாகவும் காணப்பட்டாள். அவர்கள் இருவரும் இணைந்து செல்வது, அறமான செயல்தான் என்று கருதி யாம் வாளா வந்து விட்டோம்" என்று கூறுகிறார் துறவி.

அது கேட்ட செவிலித்தாய், "எனக்குரிய மகளை அவன் அழைத்துப் போவது எப்படி அறமாகும் அந்தணரே?" என்று கொஞ்சம் கடுமையாகக் கேட்கிறாள்.

துறவி அவளுக்கு ஆறுதல் கூறுகிறார் "அம்மையே! நறுமணப் பொருள்கள் பலவற்றோடு பொருந்தி யிருக்கும் சந்தனம், அதனைத் தங்கள் உடம்பில் பூசிக்கொள்பவர்க்குப் பயன்படுமேயல்லாமல், அது மலையிடத்தே பிறந்ததாயினும் மலைக்கு எந்த வகையில் பயன்படும்? ஒருவகையிலும் பயன்படாதல்லவா! அந்தத்தன்மையை நன்கு ஆராய்ந்து பார்த்தால், அதுபோலவே உங்களுடைய மகள் பருவமடைந்தபோது உங்களுக்குப் பயன்

பட மாட்டாள். அவளை நுகரும் தன்மை ஒத்த பருவமடைந்த அந்த ஆண் மகனுக்குத்தான் பொருந்தும்! சாதாரணமாக முத்துக்களை எடுத்துக் கொள்ளுங்கள். தலை சிறந்த வெள்ளிய முத்துக்களானாலும், அவற்றை அணிந்து கொள்பவர்க்கு அவை பயன்படுமேயல்லாமல், அவை பிறந்த இடம் கடலிடமாக இருந்த போதிலும், அவற்றால் அந்தக்கடலுக்கு என்ன பயன் ஏற்படும்? ஒன்றும் கிடையாது! அது போலவேதான் நன்கு ஆராய்ந்து பார்த்தால் உங்களுடைய மகளும் உங்களுக்குப் பயன்பட மாட்டாள்! யாழிசை எடுத்துக் கொள்ளுங்கள்; ஏழு நரம்புகளைத் தடவி எழுப்பப்படும் இனிய ஓசைகள், அவற்றைக் கேட்போர்க்குப் பயன்படுமேயல்லாமல், அந்த ஓசைகள் பிறந்த இடம் யாழ் என்பதாக இருந்த போதிலும், அந்த ஓசைகள் அந்த யாழுக்கு என்ன பயனைக் கொடுக்கும்? ஒரு பயனையும் கொடுக்காது! அதுபோல் நன்கு சிந்தித்துப் பார்த்தால், உங்களுடைய மகளும் உங்களுக்குப் பயன்பட மாட்டாள்! ஆகையால் அவள் மிக்க கற்புக்குரிய செயல் ஒன்றைத்தான் செய்துள்ளாள். ஆகவே அவளுக்கு எந்தவித துன்பத்தையும் இழைக்க முற்படாதீர்கள். தாய் தந்தையரைக் காட்டிலும் சிறந்தவொரு காதலனை—கணவனைத் தேர்ந்தெடுத்து, அவன் வழிபட்டு, அவன் பின்னே போனாள். அறங்களில் மிகச் சிறந்த இல்லறத்தை மேற்கொண்டாள். அது தான் சிறந்த அறவழியாகும்" என்று துறவி கனிவுடன் அறமொழி பகர்கிறார்.

துறவியின் அறவுரைகளைக் கேட்ட செவிலித்தாய் மனம் ஒருப்பட்டு வீடு திரும்புகிறாள்!

மேற்கண்ட காதற் காட்சியை உள்ளடக்கிக் கொண்டு மிளிர்வது, கலித்தொகையில் பாலைக் கலியின் கீழ் வரும் எட்டாவது பாடலாகும். மனமொத்த இரு ஆண் பெண் பாலர், தம்முள் காதல் கொண்டு, அக்காதல் கெடாமலும், முறிக்கப்படாமலும் பாதுகாத்துக் கொள்ள வேண்டி, தாய் தந்தையர், வளர்ப்புத்தாய் ஆகியோர்க்குத் தெரியாமல் ஓடிப் போவதும் அதனை அறிந்த செவிலித்தாய் அவர்களைத் தேடிப்போவதும், மனமொடிந்த செவிலியைத் துறவி அறிவுரை கூறி ஆறுதல்படுத்துவதும் ஆகிய பண்புகள், இற்றைக்கால சில காதல் நிகழ்ச்சிகளுக்குப் பல வகையிலும் பொருந்தி வருதலைக் காணும்போதும் காணும்போதும் வியப்புணர்ச்சி ஏற்பட்டு மகிழ்ச்சியில் நாம் ஆழ்த்தப்படுவதைக் காணலாம். பருவமடைந்த மங்கை, தாயைவிட்டுப் பிரிந்து கணவனோடு செல்ல வேண்டியவள்தான் என்பதை, சந்தனம், முத்து, யாழோசை ஆகிய எடுத்துக்காட்டுகளால் விளக்கும் தன்மை, மிகப் போற்றுவதற் குறியதாகும். ஒத்தப் பருவமுடைய ஒரு ஆணும், ஒருபெண்ணும் மனமொத்துத் தாங்களே இல்லறத்திற்கு வழி தேடிக் கொள்ளுதல், எவ்வளவு சிறப்பாக அந்த நாட்களில் அறிவுடையோரால் போற்றப் பட்டுவந்திருக்கிறது என்பதற்கு, இந்தச் செய்யுளே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்தப்பாடல் உள்ளிட்ட பாலைக்கலி முழுவதையும் பாடியவர் சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ ஆவார். இவர் அரசிருக்கை ஏறியிருந்த புலவராவர். சேரநாட்டை ஆண்டு வந்த அரசராதலால் இவர் சேரமான் என்று அழைக்கப்பட்டார். இவர் பாடிய பாலைத் திணைப்பற்றிய செய்யுள்கள் மிகச் சிறந்தனவாகப் போற்றப்பட்டமையால், இவருக்குப் பாலைபாடிய என்ற அடைமொழி கொடுக்கப் பட்டது. இவருடைய இயற்பெயர் பெருங் கடுங்கோ என்பதாக இருந்திருக்கவேண்டும். "சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோவைப் பேய்மகள் இளவெயினி பாடியது" என்று புறநானூறு 11-ம் செய்யுளடிக்குறிப்பில் வருவதால் இவர் சேரமன்னரில் ஒருவர் என்று எண்ண இடமிருக்கிறது. இவர் வீரத்திலும், கொடையிலும், தமிழ்ப்புலமையிலும் சிறந்த பெருந்தகையாவார்.

எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை அந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை ஒழுக்கத்தீ ரிவ்விடை

என்மக ளொருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ பெரும
காணேம் அல்லேம் கண்டனம் கடத்திடை
ஆணெழில் அண்ணலோ(டு) அருஞ்சுரம் முன்னிய
மாணிழை மடவரல் தாயிர்நீர் போறிர்;

பலவுறும் நறுஞ்சாந்தம் படுப்பவர்க்(கு) அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங்(கு) அனையளே!
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்(கு) அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங்(கு) அனையளே;

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்(கு) அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங்(கு) அனையளே;
எனவாங்கு,
இறந்த கற்பினாட்(கு) எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா ஆறுமற்(று) அதுவே.

[பாலைக்கலி—8]

[எறித்தரு-கொளுத்துதலை உண்டாக்குகிற; கதிர்-ஞாயிற்றின்கதிர்; குடை-வெண்குடை; ஞாயிற்றின் கதிர்களை சிதறடிக்கவல்லது வெண்குடையே என்பதைக் கண்டறிந்து பண்டைத் தமிழ்மக்கள் அதனைப் பழக்கத்தில் கொண்டிருந்தனர் என்பதற்கு வேறு சில நூற்சான்றுகளும் உள; கரகம்-கமண்டலம்; முக்கோல்-மூன்று கோல்கள்; துறவிகள் தாங்கள் செல்லுமிடங்களில் மூன்று கோல்களையும் கும்பவடிவில் நட்டு அதில் தாங்கள் கொண்டுவரும் உரியைத் தொங்கவிட்டுக்கொள்ளும் பழக்கமுடையா என்று கொள்ளுதல் உண்டு; சுவல்—தோள்; அசைஇ-வைத்து; வேறு ஓரா-வேறு ஒன்றையும் நினைக்காத; குறிப்பேவல் செயன்மாலை—ஐம்பொறியும் ஏவல் செய்தலை இயல்பாகவுடைய; கொளை-கொள்கை; நடை-ஒழுக்கம்; வெவ்விடை-வெப்பம் மிகுந்த காடு, கடத்திடை-காட்டிடை; சுரம்—பாலைநிலம்; மாண்—மாட்சிமைப்பட்ட; ஏழ்புணர்—ஏழுநரம்பால் கூட்டிய; முரல்பவர்க்கு—மீட்டுவோர்க்கு; எவ்வம்—துன்பம்; அறந்தலை-தலையான அறம்; ஆறு—வழி.]

சாக்ரடீசின் சாவு

[சாக்ரடீஸ் கி. மு. 469-ஆம் ஆண்டு பிறந்தார்; கி. மு. 399-ல் ஆண்டு செத்தார்—இல்லை சாகடிக்கப்பட்டார். அவர் உண்மைக்காக உழைத்து உயிர்நீத்த பெருந்தகையாளர்; வரலாறு கண்டறிந்த மாவீரர்களிலே தலை சிறந்தவர். பரந்த நெற்றி, விரிந்த முகம், ஒளிர்ந்த கண்கள், உலர்ந்த தலை, வெள்ளைத்தாடி, குள்ளத்தோற்றம், பருத்த கழுத்து, தடித்த உடலம் ஆகிய இவற்றோடு, அழுக்கு நிறைந்த ஆடையுடன், ஏதென்ஸ் நகரத்தின் சந்தைக் கூடங்களிலும், சதுக்கமூலைகளிலும், சாலையின் ஓரத்திலும் ஓடையின் கரையிலும், உடற்பயிற்சியிடங்களிலும் ஊர்ப் பொதுமன்றங்களிலும் ஓயாது அலைந்துதிரிந்து கொண்டிருந்த அவரை அறியாதார் அந்த ஏதென்ஸ் நகரிலே அந்நாளில் யாரும் இல்லை என்னலாம். அறியாதார் மட்டுமல்ல; அவர்கண்டு பேசாதார் யாரும் இருந்திருக்கமாட்டார்கள். போவார் வருவாரைத் தடுத்து நிறுத்தி, அரசியல், ஒழுக்கம், தத்துவம்பற்றி வம்புக்கிழுத்து, வாதிட்டுநின்று, விளக்கங்கூறி, அன்னோர்க்கெல்லாம் அறிவு கொளுத்துவந்த அவரது தொழில். அக்கால ஏதென்ஸ் நகரில் நின்று நிலவிய குடியாட்சி பற்றிய குற்றங் குறைகளையும் சமுதாய வாழ்விலுள்ள ஊழல் முறைகளையும் அவர் வன்மையாகக் கண்டித்து வந்ததால், அவர் ஆட்சியாளர்க்கும் ஆதிக்கக்காரர்க்கும் பகைவரானார்; குற்றம் சுமத்தப்பட்டார்; குற்றக் கூண்டிலே நிறுத்தப்பட்டார்; கொலைத்தண்டனை விதிக்கப்பட்டார்; கொடுநஞ்சூட்டிக் கொல்லத் தீர்மானிக்கப்பட்டார். சாக்ரடீஸ் நஞ்சூட்டிக் கொல்லப்பட்ட காட்சியை, அவருடைய மாணக்கரிலே தலைசிறந்த பேரறிஞரான பிளேட்டோ, அழகான சொல்லோவியமாகத்தீட்டி, உலகிற்கு அழியாப் பரிசாகக் கொடுத்துள்ளார். சாக்ரடீஸ் எப்படிப்பட்ட வாழ்க்கை ஈடேற்றிவந்தார் என்பதற்கு, அவர் எவ்வளவு உறுதியோடும், அமைதியோடும், களிப்போடும், கடமையுணர்ச்சியோடும் சாவை வரவேற்று நின்றார் என்பதே போதிய சான்றாகும். இதோ, பிளேட்டோ பேசுகிறார் :]

நாங்கள் உரையாடலை முடித்துக்கொண்டு எழுந்தபோது, கிரிட்டோ, "அப்படியே செய்கிறோம், சாக்ரடீஸ்! ஆனால் உங்களுடைய குழந்தைகளைப் பற்றியோ அல்லது வேறு எவையேனும் பொருள்கள் பற்றியோ, என்னிடத்திலோ அல்லது உங்கள் நண்பர்களிடத்திலோ, நீங்கள் இடவேண்டிய கட்டளைகள் ஏதேனும் உண்டோ? எங்களாலான சிறந்த பணியினை உங்களுக்கு நாங்கள் எப்படியெல்லாம் செய்யவேண்டும்?" என்று கேட்டான்.

"கிரிட்டோ! நான், எதைச் செய்யவேண்டும் என்று உன்னிடம் எப்பொழுது சொல்வேனோ, அதையே செய். உன்னைப்பற்றி நீ மிக்க அக்கறை எடுத்துக்கொள். எனக்கும், என்னைச் சார்ந்தோர்க்கும், உனக்கும் உன்னால் எவ்வளவு பணிசெய்ய முடியுமோ, இப்பொழுது அதுபற்றி நீ ஒரு உறுதிமொழியும் செய்யவில்லை என்றபோதிலும், அவ்வளவையும் செய்வாயாக. ஆனால், நீ உன்னைப் பொறுத்து அக்கறை கொள்ளாமலிருந்து, நாம் இன்றும், இதற்குமுன்பும் புரிந்த விவாதங்களில் குறிப்பிட்டபடி வாழ்க்கையின் நெறியைக் கடைப்பிடிக்காமல் போவாயேயானால், உன்னுடைய உறுதிமொழிகளெல்லாம், அவைகள் எவ்வளவு சிறந்தனவாகவும், உண்மையானவையாகவும் இருந்தபோதிலும், அவைகள் ஒன்றுக்கும் பயன்படா" என்று சாக்ரடீஸ் கூறினார்.

அதற்குக் கிரிட்டோ, "எங்களால் ஆனதையெல்லாம் செய்கிறோம். ஆனால் நாங்கள் உங்களை எப்படிப் புதைக்கவேண்டும்?" என்று கேட்டான்.

சாக்ரடீஸ் அதற்கு, "உங்களுக்கு எப்படி

விருப்பமோ அப்படிச் செய்யுங்கள். ஆனால், முதலில் நீங்கள் என்னைப் பிடித்து இருத்திக் கொள்ளவேண்டும்! நீங்கள் என்னை உங்களினின்றும் தப்பிப்போக விடக்கூடாது!" என்று நகைச்சுவைபட கூறினார்.

எங்களையெல்லாம் பார்த்துச் சிரித்துக் கொண்டே மேலும் அவர் சொல்லியதாவது: "நண்பர்களே! உங்களோடு பேசிக்கொண்டும், வாதங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டும் இருக்கும் நான்தான் சாக்ரடீஸ் என்பதை, இனிக் கிரிட்டோவை ஒப்புக்கொள்ளும்படி செய்ய என்னால் இயலாது என்றே கருதுகிறேன். இன்னும் சிறிது நேரத்தில் அவன் பிணமாகப் பார்க்கப்போகிற உடலம், நான்தான் என்று அவன் நினைக்கத்தொடங்கிவிட்டான்; அதனால்தான் என்னுடைய உடலை என்று கேட்காமல் என்னை எப்படி புதைக்கவேண்டும் என்று அவன் கவலைப்பட்டுக் கேட்கிறான். நான் நஞ்சினைக் குடித்ததற்குப் பிறகு உங்களோடு இருக்கமாட்டேன் என்பதையும், ஆனால் களிப்போடுகூடிய அமைதியான சூழ்நிலைக்குப் போய்விடுவேன் என்பதையும் எடுத்துக்காட்ட நான் கூறிய விளக்கங்கள் எல்லாம் கிரிட்டோவை மனம் வருந்தும்படி செய்துவிட்டன. வழக்கு நடக்கும்போது அவன் எப்படி எனக்கு உறுதியளிப்போனாக இருந்தானோ, அப்படியே, ஆனால் வேறு மாதிரியில், நீங்கள் எல்லோரும் என் சார்பில் அவனுக்கு உறுதியளிப்போராக இருப்பீர்களா? நான் வாழ்வேன் என்ற நம்பிக்கையில் அவன் எனக்காக உறுதியளிப்போனாக இருந்தான்; ஆனால் நான் இறந்துபட்டபிற்பாடு நான் போய்விடுவேன், உங்களோடு வாழமாட்டேன் என்ற நிலையில், நீங்கள் என் சார்பில் அவனுக்கு உறுதியளிப்போராக இருக்கவேண்டும்; அப்பொழுதுதான் என் இறப்பைப்பற்றி அவன் அவ்வளவாக வருந்தாமலிருப்பான்; மேலும் என்னுடைய உடலம் எரிக்கப்படுவதையோ அல்லது புதைக்கப்படுவதையோ அவன் பார்க்கும்போது, நான் பயங்கரமான கொடுமைகளுக்கு ஆட்பட்டு வருந்துகிறேன் என்று நினைத்துத் துக்கப்படாமலிருப்பான்; மேலும் என்னுடைய ஈமச்சடங்கின்போது, சாக்ரடீசைத்தான் நாம் எடுக்கிறோம் அல்லது சுமக்கிறோம் அல்லது புதைக்கிறோம் என்று அவன் சொல்லிக்கொள்ளாமலிருப்பான்."

பிறகு கிரிட்டோவை அருகே அழைத்து, "அருமைக் கிரிட்டோ! சொற்களைக் குற்றம் பொருந்தும்படி பயன்படுத்துதல், அந்த அளவிலே தீமைபயக்கும் என்பது மட்டுமல்லாமல், உயிருக்கே பலவிதத் தீமைகளை உண்டாக்கும் என்பதை நீ அறிந்துகொள்ளவேண்டும். நீ நல்ல மனமகிழ்ச்சியோடு இருக்கவேண்டும்; அதற்குப் பிறகு என்னுடைய உடலைப் புதைக்கப்போகிறேன் என்று சொல்; நீ எதைச் சரியென்று நினைக்கிறாயோ, எது உன்னுடைய விருப்பமாகத் தோன்றுகிறதோ அந்தப் படிக்கு நீ அதைப் புதைக்கவேண்டும்" என்று கூறினார்.

இந்தச் சொற்களை சொல்லி முடித்தவுடன், அவர் எழுந்து, பக்கத்திலுள்ள அறைக்குத் தானே குளிக்கப்போயினார்; எங்களை வெளியே காத்திருக்கும்படியாகச் சொல்லி விட்டுக் கிரிட்டோ அவருடன் சென்றான். நாங்கள் அப்படியே வெளியே காத்திருந்தோம்; அவருடைய விளக்கத்தைப்பற்றிப் பேசிக்கொண்டும், விவாதித்துக்கொண்டும் இருந்தோம்; எங்கள் மீது விழுந்திருந்த பெரிய துக்கத்தின் கொடுமையைப் பற்றியும், அவரின் அருமை பெருமைகளைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்தோம். நாங்கள் ஒரு தந்தையாரை இழந்துவிடப்போவது போலவும், நாங்கள் மீதி வாழ்நாள் முழுவதும் அனாதைகளாக ஆக்கப்படப்போவதுபோலவும் அந்தச் சூழ்நிலை எங்களுக்குப் பட்டது. அவர் குளித்துவிட்டு வந்தபோது, அவருடைய பிள்ளைகள் அவர் முன் கொண்டுவரப்பட்டனர். அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் ஒருவன் சிறியவன், மற்றொருவன் சிறிது வயதானவன். அவருடைய குடும்பத்தைச்சேர்ந்த பெண்களும் வந்தனர். கிரிட்டோவின் முன்னிலையில் அவர் அவர்களெல்லோரோடும் பேசிக்கொண்டிருந்தார். அவர்களுக்கு இறுதியாகச் சொல்லவேண்டிய கடப்பாடுகளையெல்லாம் சொல்லி முடித்தார். பிறகு அந்தப் பெண்களையும், பிள்ளைகளையும் அனுப்பிவிட்டு, எங்களிடம் வந்து சேர்ந்தார். அப்பொழுது நேரம் ஞாயிறு மறைவதற்கு ஒரு மணிதான் இருந்தது. அவர் நீண்டநேரம் உள்ளேயே போக்கிவிட்டதால், நாங்கள் அவரோடு பேசுவதற்கான பொழுதின் பெரும் பாகம் போய்விட்டது. அவர் குளியலிலிருந்து திரும்பி எங்களிடம் வந்து சேர்ந்தவுடன்,

மீதே உட்கார்ந்தார். ஆனால் அதற்குப் பிறகு அதிகம் ஒன்றும் பேசவில்லை. அப்பொழுது சட்டத்தை நிறைவேற்றுவதற்காக இருக்கும் பதினொரு பேருக்கு வேலைக்காரனாக இருப்பவன் வந்து அவர்முன் நின்றான். அவன், "சாக்ரடீஸ்! நீங்கள் மற்றவர்களைப் போல் பொருளற்ற முறையில் நடந்துகொள்ளமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். அதிகாரிகள் என்னைப் போய்க் கொடுக்கும்படி சொன்னார்கள் என்ற காரணத்துக்காக, நான் இதற்கு முன்பெல்லாம் வந்தவர்களிடம் கொண்டுபோய் நஞ்சினைக் கொடுத்து, குடிக்கும்படி சொன்னால், அவர்கள் என்மீது சினந்துகொண்டு வசைமாரி பொழிவார்கள். ஆனால், இதற்கு முன்பு இங்கு வந்தவர்களெல்லோரையும்விட சிறந்தவரும், பெருந்தன்மை வாய்ந்தவரும், மேன்மைபொருந்தியவரும் ஆன ஒருவருடன் உங்களெல்லோரையும் நான் காண்கிறேன். இப்பொழுது என்னிடம் நீங்கள் யாரும் சினந்துகொள்ளமாட்டீர்கள் என்று உறுதியாய் நம்புகிறேன். ஆனால் யார்மீது குற்றஞ் சுமத்தவேண்டும் என்பதை நீங்கள் தெளிவாக உணர்ந்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். ஆக சாக்ரடீஸ்! நான் நன்றி கூறிக்கொள்கிறேன்; நீங்கள் எவ்வளவு எளிதாக ஆக்கிக்கொள்ள முடியுமோ, அவ்வளவு எளிதாக ஆக்கிக் கொண்டு இதனைத் தாங்கிக்கொள்ளுங்கள். நான் ஏன் இங்கு வந்துள்ளேன் என்பதை, நீங்கள் அறிவீர்கள் என்று கருதுகிறேன்" என்று கூறிவிட்டு, அழுதுகொண்டே வேறு பக்கம் திரும்பி வெளியே போய்விட்டான்.

சாக்ரடீஸ் அவனை அண்ணாந்து பார்த்து, "நானும் நன்றி கூறிக்கொள்கிறேன்! நீ சொல்லியபடியே நான் நடந்துகொள்கிறேன்" என்று அவனுக்கு மறுமொழி கூறினார்.

பிறகு அவர் எங்களைத் திரும்பி பார்த்து, "ஆ! இந்த மனிதன் எவ்வளவு அன்புடையவனாகக் காணப்படுகிறான்! நான் இங்கேயே இருந்து காலங்கழித்துவந்த இத்தனை நாட்களிலெல்லாம், அவன் அடிக்கடி வந்து என்னைப் பார்ப்பது வழக்கம். சில நேரங்களில் என்னோடு பேசிக்கொண்டிருப்பான். நான் கண்ட மனிதர்களிலே மிகச்சிறந்த ஒருவனாக இருந்துவந்தான். அவன் இப்பொழுது எனக்காக எவ்வளவு இரக்கத்தோடு அழுகிறான், பாருங்கள்! கிரிட்டோ! இங்கே வா. நாம் அவன் விருப்பத்திற்கிணங்க பண்ணுவோம். நஞ்சு தயாராக இருந்தால், அதனைக் கொண்டுவரச் சொல்லலாம்; அது இன்னமும் தயாரிக்கப்படவில்லை என்றால் அது தயாரிக்கப்படட்டும்" என்று கூறினார்.

கிரிட்டோ அதற்கு மறுமொழியாக, "இல்லை, சாக்ரடீஸ்! ஞாயிறு மறைந்துவிடவில்லை; அது இன்னமும் மலைமேல்தான் நிற்கிறது என்று கருதுகிறேன். மேலும் மற்றவர்கள் எப்படி நஞ்சு அருந்தினார்கள் என்பதை நான் அறிவேன். அவர்கள், நஞ்சு கொடுக்கப்படப்போவது தெரிவிக்கப்பட்ட பிறகு, நீண்ட நேரம் மிக்க விருப்பத்துடன் சாப்பிட்டும், குடித்தும், நெருங்கிய நண்பர்களின் கூட்டத்தை மனமகிழ்ச்சியோடு நுகர்ந்தும் ஆன அதற்குப் பிறகுதான், நஞ்சு குடிக்க ஒருப்படுவார்கள். ஆகவே, நீங்கள் விரைவுபடாதீர்கள். இன்னமும் போதுமான நேரமிருக்கிறது" என்று கூறுகிறான்.

உடனே சாக்ரடீஸ், "கிரிட்டோ! நீ யார் யாரைப்பற்றியெல்லாம் சொல்லுகிறாயோ, அவர்களைப் பொறுத்து, அது இயல்பானதாகும். ஏனென்றால், அவர்கள் அப்படிச் செய்வதால் இலாபம் அடைந்தவர்களாகிறார்கள். நானோ இயல்பாகவே அப்படிச் செய்யமாட்டேன். ஏனென்றால் சிறிதுநேரங்கழித்து நஞ்சு குடிப்பதால், நான் அடையப்போகும் இலாபம் ஏதொன்றுமில்லை. ஏற்கனவே கழித்துவிட்ட வாழ்வை, பேராசையின் காரணமாக இன்னுஞ் சற்று நீடித்து வைத்திருப்பதிலே எனக்கு வெறுப்புதான் ஏற்படுகிறது. ஆகையினாலே நான் சொல்லுகிறபடி செய்ய நீ மறுக்காதே" என்று மறுமொழி கூறினார்.

பிறகு கிரிட்டோ, பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தன் வேலைக்காரனுக்குக் கையினால் குறிப்புக் காட்டினான். உடனே வேலைக்காரன் வெளியே சென்றான். சிறிது நேரங்கழித்து அவன் ஒருவனை உடன் அழைத்துக் கொண்டு வந்தான். வந்த அந்த மனிதன் தன்கையிலே நஞ்சு தயாரிக்கப்பட்ட கோப்பையை ஏந்தியிருந்தான். சாக்ரடீஸ் அவனைப்பார்த்ததும் "என் அருமை நண்பரே! இது குறித்து நான் செய்யவேண்டிய செயல்களை நீங்கள் அறிவீர்களல்லவா? நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

உடன் அவன், "இதை முதலில் நீங்கள் குடிக்கவேண்டும். பிறகு உங்கள் கால்கள் உங்களுக்குக் கனமாகத் தோன்றுகிறவரையில் நடக்கவேண்டும். அதன் பிறகு படுத்துக் கொள்ளவேண்டும். பின்னர் நஞ்சு தானே வேலை செய்யும்" என்று சொல்லிவிட்டு, சாக்ரடீஸிடம் கோப்பையை நீட்டினான். சாக்ரடீஸ் கைநடுங்காமல், முகத்தின் நிறத்திலோ அல்லது முகத்தின்தோற்றத்திலோ மாறுதல் ஏதும் காட்டாமல், மகிழ்ச்சி கலந்தமுகமலர்ச்சியுடன் அந்த நஞ்சுக்கோப்பையை வாங்கினார். கோப்பையைக் கையிலே ஏந்திக்கொண்டு, அந்த மனிதனை உற்றுப்பார்த்து. "இந்த நஞ்சுத்துளிகளிலே ஏதேனும் கடவுளுக்கென்று கொடுக்க வேண்டுமா? என்ன சொல்லுகிறாய்? நான் கொடுக்க வேண்டுமா வேண்டாமா?' என்று கேட்டார். அதற்கு அவன் "சாக்ரடீஸ்! நாங்கள் உங்களுக்குப் போதுமானது என்று நினைத்த அளவேதான் தயாரித்துள்ளோம்" என்று மாற்றம் கூறினான்.

உடன் சாக்ரடீஸ், "நான் இப்பொழுது எல்லாம் அறிந்துகொண்டேன். ஆனால் இனி நடைபெறப்போகும் என் பயணம், செழுமையாக இருக்கவேண்டும் என்று நான் கடவுளர்களை வேண்டிக்கொள்ள வேண்டும் என்பது சட்டப்படி நியதியல்லவா? என் பயணம் செழுமையாக இருக்கவேண்டும் என்பதுதான் என் விருப்பம், என் விருப்பம் ஈடேறுவதாகட்டும்!" என்றுமட்டும் கூறினார். இந்தச் சொற்களைச் சொல்லி முடித்தவுடனே, கோப்பையை அமைதியாகவும், மலர்ச்சியுடனேயும் உதட்டிலே வைத்து, அந்த நஞ்சினைப் பருகினார். அதுவரையில் எங்களிலே பலரும் தங்களுடைய துக்கத்தைக் கூடுமானவரையில் அடக்கிக்கொண்டிருக்க முடிந்தது. ஆனால் அவர் நஞ்சு குடிப்பதைப் பார்த்தபொழுதும் அவர் நஞ்சினைக் குடித்து முடித்துவிட்டார் என்று தெரிந்துகொண்டபொழுதும் துக்கத்தை எங்களால் அடக்கிக்கொண்டிருக்க முடியவில்லை. என்னையறியாமலேயே என்னுடைய கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் வெளிவந்தன; நான் என் முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டேன். நான் அவருக்காக அழவில்லை; ஆனால் நான் அவ்வளவு சிறந்த ஒரு நண்பரை இழக்கவேண்டிய நல்வாய்ப்பற்ற நிலைக்கு வந்துவிட்டேனே என்று எண்ணி அழுதேன். அதற்கு முன்னாலேயே கிரிட்டோவினால் அவனுடைய கண்ணீரை அடக்கிக் கொள்ள முடியவில்லை; அவன் அந்த இடத்தை விட்டே அகன்றுவிட்டான். அப்பல்லடோரஸ் கடைசிவரையில் அழுகையை நிறுத்தினபாடில்லை; அவன் கோவெனக் கதறியழ ஆரம்பித்துவிட்டான். அவன் துக்கப்பட்டதும், செருமிச் செருமி அழுததும் எங்களெல்லோரையும் உருக்க அழும்படி செய்துவிட்டன. சாக்ரடீஸ் ஒருவரைத்தவிர மற்ற அத்தனை பேரும் அழுதுகொண்டிருந்தோம்.

"என் நண்பர்களே! நீங்களெல்லோரும் என்ன செயல் செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று அவர் அதட்டிக் கேட்டார். மேலும் அவர் சொல்லும்போது, "இப்படிப்பட்ட செயலைச் செய்யக்கூடாது என்பதற்காகத் தானே, முக்கியமாக என் குடும்பப் பெண்களையெல்லாம் அனுப்பிவைத்தேன். ஒரு மனிதன் சாகும்போது அமைதியான சூழ்நிலையில் சாக வேண்டும் என்று நான் கேட்டறிந்திருந்ததினாலேயேதான் அப்படிச் செய்தேன். ஆகையினாலே நீங்கள் அனைவரும் அமைதியாக இருங்கள்; துக்கத்தைத் தாங்கிக்கொள்ளுங்கள்" என்று குறிப்பிட்டார்.

நாங்கள் வெட்கப்படுவதற்குரிய செயலைச் செய்தோம் என்று கேட்டவுடனே, அழுகை நிறுத்திக்கொண்டோம். ஆனால் அவர் அங்கு மிங்கும் சிறிதுநேரம் நடந்தார். அவருடைய கால்கள் அவருக்குக் கனப்பதாக அவர் உணர்கிறவரையில் நடந்துகொண்டிருந்தார். பிறகு, முன்னர் சொல்லிக்கொடுக்கப்பட்டவாறு, படுக்கையில் மல்லாந்து படுத்துக்கொண்டார். பின்னர் அவருக்கு நஞ்சுகொடுத்த அந்த மனிதன் நிமிடத்திற்கு நிமிடம் அவருடைய அடிகளையும், கால்களையும் தொட்டுப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அதன் பின்னர் அவன் அவரது காலை மிக அழுத்தமாக அழுத்திப் பிடித்துக்கொண்டு, "நான் தொடுவதால் ஏதாவது உணர்ச்சி தெரிகிறதா?" என்று கேட்டான். சாக்ரடீஸ், "இல்லை!" என்று விடையிறுத்தார். பிறகு கால்கள் இரண்டும் மரத்துப் போயின; கொஞ்சம் கொஞ்சமாக மேலே மரத்துக்கொண்டேவந்தது; மரத்துப்போன பகுதிகள் சில்லென்றும், கடினமாகவும் இருந்தன. காலிலிருந்து உடல் மரத்துக்கொண்டு வருதலைச் சாக்ரடீஸே உணர்ந்தார்; அது இரு

தையற்கலை

[கே. பி. சுந்தரம் G. C. T.]

சோலி

இன்று சோலி, ஒரு புதுப்பெயர். புதிய நாகரிக உடை என்று எண்ணப்படுவதாகும். சோலியைப் பற்றியும் அதன் வகை வனப்பைக் குறித்தும் பேசாத பெண்களில்லை என்றே கூறலாம். உடை வளர்ச்சியையும் மாற்றத்தையும், புலப்படுத்தும் வரலாற்றைப் பார்த்தால், ஓர் உண்மை விளங்கும்- அதாவது, இன்று "சோலி" யாக வழங்கும் சட்டை, இன்றைக்கு ஏறத்தாழ இருபது ஆண்டுகட்கு முன்—ரவிக்கை என்ற பெயரில் வழங்கியதேயாகும். ஆனால் அப்பழமை சில மாறுதல்களுக்கு இடந்தந்து-புதுமையாகிவிட்டது.

வரலாறு எதுவானாலும் இன்று எல்லோரும் விரும்புவதாக அமைந்துவிட்டது "சோலி". அந்த உடையே இன்றைய நாகரிகத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. அதைத் தாமே வெட்டித் தைத்து அணிய விரும்புவதும் முறைதானே! இந்த சோலியைப் பலர் பல முறைகளைக் கையாண்டு வெட்டலாம். அவற்றுள் ஓர் எளிய வகையே, கீழே காணப்படுவது,

விளக்கப்படத்தில் வரைந்துள்ளதற்கு ஒப்ப அமைந்துள்ளதா என்று ஒத்திட்டுப் பார்த்த பின்னர் வெட்டத்தொடங்கவும்.

அளவுகள் :

இடுப்புவரை முதுகு நீளம் 14 அங்.
முழு நீளம் 18 ,,
பாதித்தோள் $6\frac{1}{4}$,,
கை நீளம் $9\frac{1}{2}$,,
மார்பு சுற்று அளவு 34 ,,
முன்னங்கை சுற்று அளவு 11 ,,

1-ல் இருந்து 0 வரை $18\frac{1}{2}$ அங்.
(முழு நீளம் + அங்)
2-ல் இருந்து 0 வரை 7 அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் $1\frac{1}{2}$ அங். குறைவு)
3-ல் இருந்து 0 வரை 3 அங்.
4-ல் இருந்து 0 வரை $6\frac{1}{2}$,,
(பாதி தோள் + $\frac{1}{4}$ அங்)
5-ல் இருந்து 4 வரை $\frac{1}{2}$,,
6-ல் இருந்து 2 வரை $9\frac{1}{2}$ அங.
($\frac{1}{4}$ மார்பளவு + 1 அங். 2, 6-க்கும் குறுக்குக்கோடு)
7-ல் இருந்து 9 வரை $9\frac{1}{2}$ அங்.
8-ல் இருந்து 1 வரை $9\frac{1}{2}$,,
9-ல் இருந்து 0 வரை $14\frac{1}{4}$,,
(இடுப்புவரை முதுகுநீளம + $\frac{1}{4}$ அங்.)
10-ல் இருந்து 0 வரை $1\frac{1}{2}$ அங்.
11-ல் இருந்து 3 வரை $3\frac{1}{2}$,,
12-ல் இருந்து 0 வரை $3\frac{3}{4}$,,

தயத்தண்டை வரும்போது, தான் இறந்துபடுவேன் என்றும் குறிப்பிட்டார். அவருடைய உடல் சில்லிட்டு மரத்துக்கொண்டு வருகையில், அவர் தமது முகத்தைமூடிக்கிடந்த துணியைத் தம் கையால் அகற்றி விட்டுக்கொண்டு, கடைசிமுறையாகப் பேசினார். அவர் கூறிய கடைசி சொற்களாவன: "கிரிட்டோ! நான் ஆஸ்கிளிபீயஸ்ஸுக்கு ஒரு கோழி கடன்கொடுக்கவேண்டும்; அதைக் கொடுக்க மறந்துவிடாதே" எனபனவேயாகும். அதற்குக் கிரிட்டோ, "அது அப்படியே செய்யப்படும். தாங்கள் விரும்புவது வேறு ஏதேனும் உண்டோ?" என்று கேட்டு நின்றான்.

இந்தக் கேள்விக்கு அவர் மறுமொழி ஏதும் சொல்லவில்லை. ஆனால் சிறிதுநேரங் கழித்த பின்னர் ஒரு அசைவு காணப்பட்டது; தலை சாய்ந்தது. அந்த மனிதன் மூடியிருந்த துணியை நீக்கிப் பார்த்தான், அவருடைய கண்கள் அசைவற்று நின்றிருந்தன. பிறகு, கிரிட்டோ அவருடைய வாயையும், கண்களையும் மூடினான்.

எகேக்ராடெஸ்! இதுதான் நமது நண்பரின் முடிவாகும். நான் பார்த்தவரையில், பேரறிஞரும், உண்மையானவரும், சிறந்தவரும் ஆன மனிதர், அவர் ஒருவரே என்றுதான் நான் கருதுகிறேன்!

13-ல் இருந்து 5 வரை நேர்கோடு
14-ல் இருந்து 13 வரை 1½ அங்.
15-ல் இருந்து 14 வரை ¾ ,,
16-ல் இருந்து 7 வரை ½ ,,
17-ல் இருந்து 1 வரை ½ ,,

A, 12 எண்கள் உள் இடத்தில் முன்பக்கம் திறப்பு (ஒப்பன் அமைக்கவும்) 17-ல் இருந்து 8 வரை பின்பக்கம் ½ அங். வெட்டி எடுத்து விடவு.



17, 10, 3, 5, 15, 6, 16, 8, 17 எண்கள் வரை பின்பக்கம் இணைப்பவைகள்.

A, 12, 11, 3, 5, 14, 6, 16, 8, A எண்கள் முன்பக்கம் இணைப்பவைகள்.

9, 16 எண்ணுக்கும், மத்தியில் ¾ அங். அகலம். 7 அங். நீளம். முன்பக்கம்இரண்டடுக்கும், பின்பக்கம் இரண்டடுக்குகளும் அமைக்கவும்.

கழுத்துப்படத்தில் உள்ளபடி இரண்டுவிதமாகவும் அமைக்கலாம். (அணிபவரின் விருப்பப்படி) படம் தைப்பதற்கு ¼ அங். வைத்து வரையப்பட்டுள்ளது.

சோலி கை



1-ல் இருந்து 0 வரை 9½ அங்.
(கை நீளம்)
2-ல் இருந்து 0 வரை 4½ அங்.
($1/8$ மார்பளவு)
3-ல் இருந்து 2 வரை 6½ ,,
(3-ல் இருந்து 0 வரை சாய்வுகோடு வரையவும்)
4-ல் இருந்து 3 வரை 5 அங்.
5-ல் இருந்து 4 வரை 1 ,,
(5-ல் இருந்து 1 வரை 5½ அங்.
முன்னங்கை சுற்றளவு)
6 ல் இருந்து 0 வரை 2 அங்.
7-ல் இருந்து 6 வரை 3 ,,
8-ல் இருந்து 7 வரை ½ ,,
9-ல் இருந்து 6 வரை 1 ,,
A-ல் இருந்து 8 வரை ¾ ,,
K-ல் இருந்து 9 வரை ¼ ,,

3, 8, 9, 0, எண்கள் பின்பக்கம் கை இணைப்பவைகள்.

3, A, K, 0, எண்கள் வரை புள்ளிகள் வைத்துள்ள கோடுவரை முன்பக்கம் கை (கவார் தட்டு) வெட்டி எடுத்துவிடவும்.

தைப்பதற்குத் தேவையான உள் துணி (தையல் வேன்) வைத்து வெட்டவும். (கைக்கு மட்டும்).

அழைப்பு

வண்டிமாடுகளை அவிழ்த்துவிட்டு, வரதன் நுகத்தடியை உயர்த்திவிட்டான். வண்டியிலிருந்த மணல் சரிந்து விழுந்துகொண்டிருந்தது. வண்டியை அப்படியே விட்டுவிட்டு, அந்தத் தென்னந்தோட்டத்தில் கீற்று முடைந்துகொண்டு உட்கார்ந்திருந்த கந்தப்பனிடம் வந்தான்.

வரதன் வந்ததைக் கவனிக்காமல் கந்தப்பன், ஓலையைக் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னிக் கொண்டிருந்தான். "கந்தா!" என்று வரதன் கூப்பிட்டதும்தான் அவன் விழித்துப் பார்த்தான்.

"என் ?"

"இந்தக் கடிதாசியைப் படித்துப்பாரு!" என்று ஒரு அச்சிட்ட தாளை வரதன் நீட்டினான்.

வரதன், மிக்க கசியப்பார்வையுடன் கொடுத்த காகிதத்தை கந்தப்பன் படித்து முடித்தான். அது அந்தக் கிராமத்திலிருந்த "லண்டன் பள்ளிக்கூடத்" திலிருந்து வந்தது. கிருஸ்தவ மிஷன் ஒன்றால் அங்கு வைக்கப்பட்டிருந்த பள்ளிக்கூடத்துக்கே லண்டன் பள்ளிக்கூடம் என்று சேரியில் வழங்கப்பெற்றது. அதில் படித்தவர்களில்—அதில் இருந்த பாதிரி எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்துங்கூட மூன்றாவது, அல்லது நான்காவது வகுப்புக்குமேல் ஒரு சேரிப் பையனையாவது கொண்டுபோக முடியவில்லை—சேரியில் சிலர் இருந்தனர், அவர்களைக் கேட்டால், "லண்டனில்" படித்தோம் என்றுதான் பெருமையுடன் சொல்வார்கள். அந்தவகையில் "லண்டனில்" நான்கு வருஷம் படித்த பாக்கியம் கந்தப்பனுக்கு இருந்தது.

வரதனின் மகன் வேலு அந்த மிஷன் பள்ளிக்கூடத்தில் படித்துவந்தான். வருஷக் கடைசியில் நடக்கும் கொண்டாட்டத்துக்கு வெளியூரிலிருந்து கலெக்டர் துரை வருகிறார். அதற்கு வரச்சொல்லி, வரதனுக்கு அழைப்பு வந்திருந்தது. அழைப்பு, பொன் எழுத்துக்களால் அச்சிடப்பட்டு இருந்தது, அழைப்பைப் படித்து முடித்ததும், வரதன் தன் மடியிலிருந்த கவரொன்றை எடுத்துத் தந்தான். அதன்மீது "திருவாளர் வரதப்பிள்ளை" என்று போட்டிருந்தது. கந்தப்பன் வாசித்ததும், வரதன் பெருமையுடன் இரண்டையும் தன் மடியில் வைத்துச் சுற்றிக்கொண்டான்.

இதற்குமுன் வரதனுக்கு யாரும் அச்சிட்ட அழைப்பு—அதில் பொன் எழுத்துக்களால் அச்சிட்டது—அதிலும் ஒரு வெள்ளைக் கவரில் போட்டு, மேல் 'திருவாளர் வரதப் பிள்ளை' என்று விலாசமிட்டு—உம்-யாரும் அனுப்பியதில்லை.

"ஆமா! என் பையன்கூடப் படிக்கிறானே! எனக்கு ஒன்னும் வரலியே!" என கந்தப்பன் கேட்டான்.

பதில் சொல்லுமுன், வரதன் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டான். "வேலு, அவன் வகுப்பில், அவன்தான் முதல் பையனாம். அவனுக்கு இன்னைக்குப்பரிசு தரப் போறாங்களாம்".

"அப்படியா?" என்று கந்தப்பன் ஆச்சரியப்பட்டான்.

"ஆமாம்!" என்று வரதன் தலையாட்டிக் கொண்டான். "நேற்று வேலு சொன்னான். ஒரு புஸ்தகமும் பேனாவும் கலெக்டர் துரையே எடுத்துக் கொடுப்பாராம்".

கந்தப்பன்கூட அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்திருந்தபோதிலும், இதுமாதிரி சேரியிலிருந்து போன பையன் பரிசுவாங்கினான் என்று கேள்விப்பட்டதில்லை. வேறு-யாராவது ஐயமார் வீட்டுப் பிள்ளைகளுக்குத்தான் கிடைக்கும். இப்பொழுது வரதன் பையனுக்குக் கிடைத்திருக்கிறதென்றால் ஆச்சரியமானதுதான்.

"ஆனால், கந்தா! கூட்டம் 4 மணிக்குன்னு போட்டிருக்கே. எப்படி நான் போறது?"

வரதனின் கேள்வி உண்மையான பிரச்சினையே. ஏஜண்டு ராமு ஐயரைக் கேட்டால், நிச்சயம் போகமுடியாதென்பது தெரியும். முதலில் பையன் ஏன் படிக்கப்போனான் என்றே அவர் கேட்பார். அதற்குமேல், பள்ளிக்கூடத்து கூட்டத்துக்கு வரதன் போக வேண்டுமென்றால், அவருக்குக் கோபங்கூட வராது, சிரிப்புதான் வரும். தனக்கு வந்திருக்கும் அழைப்பையும், பையனுக்குத் தரவிருக்கும் பரிசையும்பற்றிச் சொல்ல வரதனுக்குத் துணிவு கிடையாது. அவருக்கு வருகிற கோபத்தில், ஏஜண்டு ஐயர் என்ன செய்வார் என்று சொல்லமுடியாது.

ஆனால் எப்படியாவது போய், அந்தக்கூட்டத்தில் தன் மகன் பரிசுவாங்குவதைப் பார்க்க வேண்டுமென்று வரதனுக்கு ஆசை. மேலும் பொன் எழுத்தால் அச்சிட்ட அழைப்பு, அவன் விலாசமிட்டு வந்திருக்கிறது. அதற்கு மரியாதை செய்ய வேண்டாமா?

இரண்டுபேரும் உட்கார்ந்து யோசித்தார்கள். கடைசியாக கந்தப்பன் ஒரு அபூர்வத் திட்டத்தைச் சமர்ப்பித்தான். அதன்படி நான்கு மணிக்கு ஏஜண்டு ஐயர் தோப்புக்குள் வரும்பொழுது, வரதன் தயாராக இருந்து, திடீரென்று மூர்ச்சைபோட்டு விழவேண்டும். கந்தப்பன் உடனே ஓடிவந்து அவனைப் பார்த்து, "வைத்தியரிடம் கொண்டுபோகிறேன்" என்று வண்டியில் போட்டுக்கொண்டு வைத்தியர்வீட்டுக்குப் போவான். பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில்தான் வைத்தியர் வீடு இருக்கிறது. பள்ளிக்கூடம் வந்ததும், இரண்டுபேரும் அங்கு நடப்பதைப் பார்த்துவிட்டு, பின் வைத்தியர் வீட்டுக்கோ, சேரிக்கோ போய்விடலாம்.

கந்தப்பனின் யோசனை வரதனுக்குப் பிடித்திருந்தது.

எப்பொழுதும் நான்குமணிக்கு வருகிற ஏஜண்டு ஐயர் அரைமணி நேரங்கழித்துதான் வந்தார். அதற்குள் வரதனின் பரபரப்பும், ஆவலும் கட்டுக்கடங்காமலிருந்தன. இன்னும் கொஞ்சநேரம் அவர் வராதிருந்தால் அவன் பைத்தியம் பிடித்தவனாகவே ஆகியிருப்பான்.

ஆனால் அவரும் பள்ளிக்கூட விழாவுக்குப் போகிறவர்தான். வழியில், தோட்டவேலையைப் பார்த்துவிட்டுப்போக வந்திருந்தார். அவர் பள்ளிக்கூடத்துக்குப் போகும்பொழுது, தானும் அங்கு போகலாமா என்று வரதனுக்குத் தயக்கம் வந்தது. கந்தப்பன் தைரியமூட்டிக் கண்ணைக் காட்டியதும்தான், வேலைசெய்து கொண்டிருந்த வரதன் "மூர்ச்சை" போட்டு விழுந்தான்.

வரதன் மூர்ச்சை போட்டதைப் பார்த்ததும், ஏஜண்டு ஐயரே பயந்துவிட்டார். ஆனால் அவர் எப்படி அவனைத் தொட்டுத் தூக்கி உட்காரவைக்க முடியும்? ஆதலால் "கந்தா! ஓடிவாடா! வரதன் மூர்ச்சைபோட்டுட்டான்" என்று கூவினார். கந்தப்பன்தான் தயாராக நின்றுகொண்டிருக்கிறானே! தண்ணீர்க்குவளை எடுத்துவந்து, வரதன் முகத்தில் தண்ணீர் தெளித்தான். ஆனால் மூர்ச்சை தெளியவில்லை. வரதன் பேசாமல் மூச்சை அடக்கிக்கொண்டு கிடந்தான்.

"சாமி! மயக்கம் தெளியலேங்க! வைத்தியர் வீட்டுக்குக் கொண்டுபோய் காண்பிக்கட்டுங்களா!"

ஏஜண்டு ஐயர் பொறுமையிழந்தார். "எந்தச் சுடுகாட்டுக்காவது போ! நான் பள்ளிக்கூடத்துக்குப் போகணும்! நம்ம குழந்தை கமலி பரதநாட்டியம் செய்யப்போறா!" என்று தனது வில்வண்டியில், மாடுகளின் சதங்கை சலசலக்க போய்விட்டார்.

"ஏஜண்டு ஐயா போயிட்டாரு. எழுந்திருடா!" என்று கந்தப்பன் வரதனைத் தட்டி எழுப்பினான்.

ஆனால் வரதன் எழுந்திருப்பதாயில்லை. வரதன், கையைப்பிடித்துப் பார்த்தான், கண்ணை நீக்கிப் பார்த்தான், மார்பில் கை வைத்து, மூக்கில் விரல்வைத்து......

"மூர்ச்சை"யான வரதன் இறந்துகிடந்தான். அவனுக்குப் பக்கத்தில், ஒரு அழைப்பு —பொன் எழுத்துக்களால் எழுதப்பட்ட அழைப்பு கிடந்தது!

Regd. No. M 6296

சென்னையில் எதிர்பாருங்கள்!

நடிப்புப் புலவர்

அவர்தம் குழுவினரும் நடிக்கும்

(நாடகம்)

கதை, வசனம் :

நாடக டைரக்ஷன் : எம். எஸ். முத்துகிருஷ்ணன்

பாடல்கள் : கு. ச. கிருஷ்ணமூர்த்தி
முத்துக்கூத்தரசன்

இசையமைப்பு : எஸ். சி. கிருஷ்ணன்.

'மன்றம்' கட்டண விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0—5—0

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

நிர்வாகி,

மன்றம்.

காந்தி
பரிமள பாக்குத்தூள்

விசேஷ வைபவங்களில்
முதன்மையாக இருப்பது
எல்லோர் வீட்டிலும்
விரும்பப்படுவது.

விவரங்களுக்கு :
காந்தி பரிமள பாக்குத்தூள்
கம்பெனி,
கோட்டூர், தேரழுந்தூர் P.O.
தஞ்சை மாவட்டம்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.